# இலங்கையின் சமயங்களும்

அவைதரும்

# இன்ப வாழ்க்கை நெறியும்

(முதலாம் பாகம்)

சரசாலை ச. தியாகராசா

சமூ 60 / 200/18
60

உ

சிவமயம்

# இலங்கையின் சமயங்களும்

அவைதரும்

# இன்ப வாழ்க்கை நெறியும்

(முதலாம் பாகம்)

Acc No 60 294.5
Class No 294.5

ஆசிரியர்:

**சரசாலை ச. தியாகராசா**

(உதவி ஆசிரியர் இந்துசாதனம்)

அச்சுப்பதிவு:

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

1955

பதிப்புரிமை] [விலை 80 சதம்.

உ
சிவமயம்

# மதிப்புரை

தென்இந்திய சைவசித்தாந்த மகாசமாச ஆண்டுப் பேரவைத் தலைவராய்த்திகழ்ந்து
திருக்கேதீச்சரத்திருப்பணிச்சபைத்தலைவராய் விளங்குகின்ற
கைத்தொழில் வீடமைப்பு சமுகசேவா அமைச்சர்

## கௌரவ சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வழங்கியது.

எல்லாச் சமயங்களும் அடிப்படைக் கொள்கையில் ஒருமைப்பாடுடையனவாகத்திகழ்கின்றன.

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்குபரம் பொருளே நின்விளையாட்டல்லால் மாறுபடுங்கருத்தில்லை......"

இவ்வுண்மை யாவரும் போற்றத்தக்க முறையில் இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய நூலைச் சமரசக்கொள்கை நிறைந்த சைவசமயப்பற்றுள்ளவரே எழுதுவது தகுதியாகும். அதுவும் சுத்த சைவபரம்பரையிற் பிறந்து சைவசமயத்துக்கே தொண்டாற்றி அவ்வருள்வழி நிற்கும் ஒருவர் இயற்ற நேர்ந்ததே தலைசிறந்ததாயிற்று.

இந்நூலாசிரியரவர்கள் இலங்கையில் தற்பொழுது நிலவிவரும் சமயங்களைப்பற்றி நன்கு ஆராய்ந்தறிந்து அவற்றின் பிழிசாற்றை எச்சமயத்தவராயினும் எதிர்க்கமுடியாதவகையிலே நல்கியுள்ளார்கள். இவரது முயற்சி பாராட்டத்தக்கது.

பிறமதங்களைப்பற்றி அறிந்து அதன்பயனாக ஒற்றுமைவாழ்வு வாழ்தற்கு இந்நூல் மக்களுக்குப் பேருதவியாகவிருக்கும்.

இந்நூலாசிரியர் நீண்ட நாள் வாழ்ந்து இத்தகைய தொண்டுகள் பல புரிய எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக.

கொழும்பு,
11-8-55.

**க. வைத்தியநாதன்**

உ

சிவமயம்

# மதிப்புரை

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியை

## திருவருட்செல்வி

## ஞானேஸ்வரி தம்பு B. A. (Hons.) அவர்கள்

ஈந்தது

உலக சரித்திரத்தின் கண்ணே, உலக மக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கிய உத்தமர் பலர். இப்படிப்பட்டவர்களை அவதார புருஷர்கள் எனவும், மகாத்மாக்கள் எனவும், சமய குரவர் எனவும், போற்றுகிறோம். எல்லையற்ற அன்பின் அவதாரமாகிய இயேசுக்கிறீஸ்துநாதர், கருணையே வடிவான புத்தர்பிரான், அரேபியாப் பாலைவனத்தில் தோன்றி அருளொளி வீசிய முகம்மதுநபி, சைவசமய ஆசாரியர்களாகிய சமய குரவர் சந்தான குரவர் ஆதியோரின் திவ்விய சரிதங்களையும் அவர்கள் உலகிேனோர்க்குக் காட்டிய அருள்நெறியையும் சுருங்கக்கூறி, அவையனைத்திலும் உள்ள அடிப்படைக் கொள்கைகளின் ஒற்றுமையை உணர்த்துவதாக அமைந்துள்ளது "இலங்கையின் சமயங்களும் அவை தரும் இன்ப வாழ்க்கை நெறியும்" என்னும் இந்நூல்.

ஒவ்வொருவரும் தன் மதத்தை மாத்திரமன்றிப் பிறமத உண்மைகளையும் உணர்ந்து இருத்தல் மிகவும் அவசியம். அதுவே பரந்த நோக்கையும், சமரச மனப்பான்மையையும், அளிக்க வல்லது. இவ்வுண்மையை உணர்ந்து காய்தல் உவத்தல் இன்றிப் பரந்த நோக்குடன், எல்லாச் சமயங்களையும் மதித்து, அவை கூறும் மெய்ப்பொருளை எடுத்து உணர்த்தும் ஆசிரியரின் சமரச மனப்பான்மை போற்றற்குரியது.

அன்பு வழி நின்று உண்மையைக் கடைப்பிடித்தலே எல்லாச் சமயங்களும் கூறும் அறநெறி என்பதனைத் தெளிவாக விளக்கும் இந்நூல் போரிலும் குழப்பத்திலும் ஆழ்ந்து அல்லலுறும் உலகை நல்வழிப்படுத்தும் இயல்பு வாய்ந்தது.

இந்நூலை ஆக்கியோன் மேன்மேலும் இத்தகைய தொண்டை உலகிற்குப் புரிய இறைவன் திருவருள் கூடுவதாக.

யாழ்ப்பாணம்
12-9-55.

ஞானேஸ்வரி தம்பு

உ
சிவமயம்

# மதிப்புரை

பரமேஸ்வரக் கல்லூரிப் பேராசிரியரும்,
சைவநூற் பேரறிஞரும்
சைவசீலருமாகிய

## ஸ்ரீ மு. ஞானப்பிரகாசம் B. A, B.Sc. அவர்கள்

### உதவியது.

தெய்வந்தெளிந்து, தெளிந்தோர்ப்பேணி, பொய்யுரையஞ்சி ஊனூண்துறந்து, உயிர்க்கொலை நீங்கி, தானஞ்செய்து, தவம்பலதாங்கி வாழும் வாழ்வே சமயவாழ்வு. அந்தச் சமயவாழ்வைத் தத்தமக்குரிய முறையில் ஒவ்வொரு சமயத்தவரும் பயபக்தியுடன் அனுஷ்டித்து வருதல் வேண்டும் என்பதனையே நமது நண்பர் சரசாலையூர் ஸ்ரீமான். தியாகராசா அவர்கள் இந்த நூலில் வரும் கட்டுரைகள் மூலம் எங்களெல்லோரையும் வேண்டிக்கொள்ளுகின்றார்.

பயபக்தி என்பது சமயங்களெல்லாவற்றிற்கும் உயிராய்த்திகழ்வது. அது இன்றேல், சமயவாழ்வு மாத்திரமல்ல, குடும்பவாழ்வுமில்லை; சமுகவாழ்வுமில்லை; உலகவாழ்வுமில்லை; பயபக்தி (Reverence and Respect) என்னும் அருங்குணத்தை வளர்த்து, மக்கள் தங்கள் வாழ்க்கையை வாழுதல் வேண்டும் என்பதை நமது நண்பர் தமது கட்டுரைகளில் மிகவும் அழுத்தி அழுத்திக்கூறிச்செல்கின்றார்.

இந்நூலாசிரியர் இருமரபும் சைவ பரம்பரையினர். சைவசித்தாந்த நூலுணர்ச்சியில் வளர்ந்தவர். இந்துசாதன அலுவலகத்திலிருந்து கடமையாற்றிச் சைவத்தொண்டுபுரிந்து வருபவர். உண்மைப் பெரியாரின் அடிச்சுவட்டைப்பின்பற்றி நின்றொழுகுபவர். சுருங்கக்கூறின் உறவும், பொருளும், ஒண்போகமும், கல்வியும், கல்வியுற்ற பயனும், ஆகிய **எல்லாம் ஆண்டவனின் திருவடிகளே** என்ற உணர்ச்சியையுடையவர். இந்நூலாசிரியரின் சமய வாழ்வின் பெரும் பயனாய் வெளிவரும் இந்நூல் இன்றைய உலகினை ஆட்டிவைக்கும் அசுரசக்தியின் பயங்கர வேகத்தைத்தடுக்கவும் தணிக்கவும் உதவ வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி வழுத்துகின்றேன்.

மு. ஞானப்பிரகாசம்.

பரமேஸ்வரக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
29—8—53.

# முகவுரை

திருமலி யிலங்கையின் நறுநுதலெனமிளிர் யாழ்நாடதனில் சரசாலையெனுமூரிலே பிறந்து தியாகராசாவெனுஞ் சிவன்திருநாமமே சூட்டப்பெற்றுத் தன்னிருமுதுகுரவர் காட்டிய சைவ நன்னெறி யொழுகித் தமிழ் ஆங்கிலம் எனுமிருமொழிகளுங்கற்றுச் சைவசமய நூல்கள் பலவற்றுடன் கிறிஸ்தவவேதத்தையும் ஓதியுணர்ந்தனர் இந்நூலாசிரியர். இவர் தமது இருபதாம் வயசில் தபாற்கந்தோரதிபராம் அரச உத்தியோகமேற்றுக் கடமையாற்றி வரும் நாட்களில், ;திருவருள் செலுத்த, சைவப்பேராசிரியர் உயர்திரு. சு, சிவபாதசுந்தரம் அவர்களியற்றிய சைவபோதமெனும் நூற்பகுதிகளை மீட்டும் பார்க்கவிழைந்து அவற்றைப்படித்து, திருவருட்பயன், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார் முதலிய சைவசித்தாந்த சாத்திரங்களையும் ஏனைய சமய நூல்களையும் நுணுகியாராய்ந்து, அவற்றிற் பிரதிபாதிக்கப்படும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளின் செய்தியே பொருளெனவுணர்ந்து வருநாளில், சத்திநிபாதத்துத்தமர்கள் தந்திருவடியடைந்துய்யும் பொருட்டுப் பிரமாதி மூவர்க்குமேனைத்தேவர்க்குங் காண்பரியதும் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாயுள்ளதுமாகிய சச்சிதானந்தப்பரம்பொருளே யாழ்நகரின்கண் கொழும்புத்துறையெனுந் திருப்பதியில் சிவயோகநாதனெனுங் குருமூர்த்தமாயெழுந்தருளியிருப்ப, அருள்வழி ஆண்டுச்சென்று அடிபணிந்து சற்குருமூர்த்தியைத்தரிசித்து அருள்மொழிபெற்று அவ்வழி நின்று தமது அரசகடமைகளைப்பற்றின்றி மேலுஞ்சிலகாலம் தொடர்ந்தியற்றியபின்னர் தபாற்கந்தோருத்தியோகத்தை நீத்து, மேலும், இல்லறதருமம் இனிது நிகழவேண்டி, வேளாண்டொழிலை மேற்கொண்டொழுகும் நாளில், ஈழநாட்டில் வழங்கும் ஈரிரு சமயமும் அவ்வச்சமயத்தையநுட்டிப்போரின் பக்குவநிலைகளுக்கியைய, ஈசனருளால் அமையப்பெற்றனவேயென்றும், அவைகூறும் ஒழுக்கநெறிகள் அன்பையே ஆதாரமாக உடையனவென்றும் உணர்ந்து, எம்நாட்டவர் பலர் தத்தம் சமயநூல்களைச் செவ்வனே கற்று அவற்றின்வழி ஒழுகவில்லையேயென்பதை நினைந்தும், சைவமரபிற்பிறந்தும் அறிவுவிளங்கப்பெறாப் பாமர மக்களை ஏனைய சமயவாதிகள் இம்மையின்பவசதிகள் சில கொடுத்து ஏமாற்றி மதமாற்றஞ் செய்வதைக்கண்டுர், மனம்வருந்திச் சம்சாரவாழ்க்கையிலமர்ந்திருக்கும் மக்களுள் தமிழ் நூல்களை வாசித்துணரும் ஆற்றலுள்ள எந்நிலத்தவரும் இந்நூலை வாசித்து அதன்பயனாகத்தத்தம் சமயநூல்களை நன்குகற்று நன்னெறியிலொழுகி உய்தியடையுமாறும், தத்தம்

சமயங்களுக்கும் ஏனைய மதங்களுக்குமுள்ள அடிப்படைக்கொள்கைகளின் ஒருமைப்பாட்டையுணர்ந்து யாவர்மாட்டும் அன்புடையராய்த் தெய்வீகநெறியில் ஒழுகும் பொருட்டும், சைவசித்தாந்த சாத்திரங்கள் சைவத்திருமுறைகள் முதலிய சைவநூல்களுடன், விவிலிய வேதம், தர்மபாதம், கூரான் முதலிய கிறிஸ்த,பௌத்த,இஸ்லாமிய நூல்களிலிருந்து சிறந்த போதனைகளை எடுத்துக்காட்டிக் குறித்த நான்கு சமயங்களின் ஆசாரியர்களுடைய சரித்திரச்சுருக்கங்களையுந்தந்து நிற்கின்ற, "இலங்கையின் சமயங்களும் அவைதரும் இன்பவாழ்க்கைநெறியும்" எனப் பெயரியவிந்நூலைத் திருவருள் வழிநின்று இயற்றி வெளியிட்டனர்.

இந்நூலை வாசிப்போர், தத்தம் மதநூல்களை ஆர்வத்துடன் நன்குகற்று அறிவு விளங்கப்பெற்று, ஏனைய சமயங்கட்கும் தமது சமயத்துக்குமுள்ள அடிப்படைக்கொள்கைகளின் ஒற்றுமையை உணர்ந்து, எச்சமயத்தவர்மாட்டும் அன்புடையராயொழுகி உய்தியடைவதற்கு இந்நூல் ஊக்கமளிக்குமென்பது எமது துணிபு.

நெறிமுறையான தமிழ்க்கல்வி, சமயக்கல்வி, ஆன்ற அறிவொழுக்கங்களிலனேனும், அடியேன் எனது ஆப்தநண்பராகிய இந்நூலாசிரியருடன் நெடுங்காலம் ஒருமித்துச்சமயக்கல்வி கற்று வந்தமையாலும், இந்நூலுருவாகுங்காலத்தில் அதன் விருத்தியை ஆர்வத்துடன் தொடர்ந்து கவனித்து வந்தேனுதலாலும்,

*"தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்*
*தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்*
*றின்னோர் பாயிர மியம்புதல் கடனே"*

என நன்னூலாசிரியராகிய பவணந்திமுனிவர் கூறினமையானும், இந்நூற்குப்பாயிரமெழுதுங் கடப்பாடு என்னுடையதேயெனக் கருதித், தமிழ்நூன்மரபு தழீஇ, இம்முகவுரை எழுதலானேன்.

**ச. முருகேசு.**

* "ஆனந்தாச்சிரமம்,"
செல்வச்சந்நிதி, யாழ்ப்பாணம்.
நந்தனஹு, ஐப்பசிமீ 22-ம்உ

*(இப்பொழுது சிவதொண்டன் நிலயம் யாழ்ப்பாணம்)

# நான் முகம்.

அரிதரிது மானிடராதலரிது, என்றபடி அருமையாய்வந்த இம் மானிடயாக்கையின் அருமைத்தன்மையை அறியும் ஆற்றலில்லாத முன்னொருஞான்று பல ஏதுக்களால் மனந்துளங்க, எம்மைத்துன்பந் தொடர்ந்தது. துன்பந்துடைக்கும்வழியுந் தெரிந்திலது. அந்நிலைமை அவ் வாறிருக்கவே ஈழத்தின் கண் திருப்பெருந்துறை யன்னதாய்த்திகழும் கொழும்புத்துறை எனும் திருப்பதியிலே திருவுருவங்கொண்டெழுந்தரு ளியிருந்து அடியார்க்கருள்புரியும், சிவஞானதேசிகமூர்த்தியாகிய சிவ யோக சுவாமியின் சந்நிதியையடையும்பேறு, காலமழையைப்போல், இலகுவாய் **வந்தெய்தியது,**

துறைதெரியாது துன்புற்ற எமக்குத்துறைஇஃதென ஈர்த்துச்செல் லும் அருட்கரமாயமைந்த அருள்மொழிகள் ஆண்டு வெளிவந்தன.மன மானது தெளிவுற்ற இன்பநிலைபெற்றது. "ஒரு பொல்லாப்புமில்லை" என்னும் உறுதிமொழி செவிமடுத்து இன்பம் நிறைந்த உள்ளத்துடன் இல்லிற்குச் செல்வதாயிற்று.

அன்றுதொட்டு **"ஒரு பொல்லாப்புமில்லை"** "ஒரு பொல்லாப்பு மில்லை" என்னும் உறுதிமொழி மேன்மேலும்கேட்டு ஒளிநெறி கண்டு உள்ளம் களிநனிகொண்டது. உரியகாலத்திலே"அன்பாயிரு" என்னும் அருளுபதேசம்பெற்று அரிய உண்மைகள் தெளியப்பெற்றோம். அவற் றின்பேறாய்வந்த "இலங்கையின் சமயங்களும் அவைதரும் இன்ப வாழ்க்கை நெறியும்" என்னும் இவ்வெளியீடு சுவாமிகளின் திருவடிக ளிலே அடியேம் அருச்சிக்கும் மலராயமைகின்றது.

காருண்ணியமூர்த்தியாய் விளங்கிய காந்தியடிகளும், அன்னாரின் திருவடிச்சுவட்டின்வழிநின்று அடிசேர் ஞானம் தோய்ந்த அரசியல் உல கியல் ஞானமொழிகளை வரையாது வாரிவழங்கிவரும் தமிழ் உலகதிலகர் ஸ்ரீ இராசகோபாலாசாரியார் அவர்களும் அறிவுறுத்திவந்த உபதேச மொழிகளும் எம்மைத்தட்டியெழுப்பி இவ்வெளியீட்டை உருவாக்க உறுதுணையாய் நின்றன.

" சன்மார்க்கஞ் சகலகலை புராணவேத சாத்திரங்கள் சமயங்கடாம் பலவுமுணர்ந்து
பன்மார்க்கப் பொருள் பலவுங் கீழாகமேலாம் பதி பசு பாசந் தெரித்துப் பரசிவனைக்காட்டு
நன்மார்க்க ஞானத்தைநாடி ஞானஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச்சிவனுடனும் பெற்றிஞானப் பெருமையுடையோர் சிவனைப் பெறுவர் காணே ".

என்னும் சிவஞானசித்திச் செய்யுளும் இவ்வெண்ணம் நிலைத்தற்குவேண் டிய ஓர் உள்ளுணர்வை ஈந்தது.

இந்நூல்தரும் பொருள்களுக்கு இறைவன் திருவருளே ஏது. நாம் கருவியே. பிறிது **நாம் அறியோம்.** ஆகவே

"தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமையிகழார் — தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"

என, பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட வள்ளல் தந்த வெண்பாவை எமக்கு உறுதுணையாய்க் கொள்கின்றேம். வாழையடி வாழையெனச் சிவனடியார் திருமரபில் வந்தேமாகலின் அவ்வாறு கொள்ளுதல் எம்மரபுக்குரித்தாயிற்று.

**"இலங்கையின் சமயங்களும் அவைதரும் இன்பவாழ்க்கை நெறியும்"** என்னும் இவ்வெளியீடு, அருட்கருணையஃதாயின், இரு பாகங்களாய் வெளிவரும். இஃது முதலாம் பாகமாகும்.

## ஆதாரநூல்கள்.

இஸ்லாம் சமயத்திற்கு * திரு கூ-ரானும், கிறிஸ்து சமயத்திற்கு சத்திய வேதம் அல்லது விவிலிய நூலும், பௌத்த சமயத்திற்கு ‡ தர்ம பாதம், பௌத்தசமயத்தின் நான்கு பிரதான கொள்கைகள், புத்த சமயம் (மாணவருக்கு), புத்தபிரானது போதனையின் சாரம், ஆசியாவின் ஒளி, புத்தசமயம் பௌத்ததருமம் பௌத்தசங்கம் ஆகியவையும், சைவசமயத்துக்கு சைவசித்தாந்த சாத்திரங்கள், சைவத்திருமுறைகள், திருக்குறள் ஆகியவையும் ஆதாரமாகக் கொள்ளப் பெற்றன.

## அளவை.

எந்த ஒரு பொருளினதும் உண்மைத்தன்மையை நிச்சயித்தற்குப் பண்டைப் பேரறிஞர் அளவைகள் வகுத்திருக்கின்றனர். அவற்றுள்ளே காண்டல், கருதல், உரை என்னும் மூன்றும் பிரதானமானவையாய், ஏனையவற்றின் பொருளையுந் தம்முளடக்கிநின்று விளங்குவனவாயமைந்

---

* Translation of the Holy Quran by Moulana Mohamed Ali M. A. LLB.

‡ Dhammapada by Narada Thera, The Four Essential Doctrines of Buddhism by Dr. C. L. A. DeSilva, Buddhism for students by Rev. Pannalankara, Essence of Buddha's Teachings by Nyanatiloka Thera Light of Asia by Sir EdwinArnold, புத்த சரித்திரம் † பௌத்த தருமம் † பௌத்த சங்கம், மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர்.

திருக்கின்றன. அவற்றுள்ளேயும் காண்டல், கருதல் ஆகிய அளவைகள் சிலருக்குச் சிலபொருள்களை மாத்திரம் நிச்சயிக்க உதவும். நிச்சயிக்குந் தன்மை அவரவர் ஆற்றலைப் பொறுத்ததாகலின் உரை அளவையே யாவருக்கும் பொதுவாயமையும். எனவே உரை அளவையே ஈண்டுக் கொள்ளப் பெறுகின்றது.

"மாசறு காட்சி யையந் திரிவின்றி விகற்ப முன்னு
ஆசற வறிவ தாகு மனுமான மவினா பாவம்
பேசுறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவதாகும்
காசறு முரையிம் மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்"

என்னும் சிவஞான சித்தி அளவை இலக்கணப்பா குறித்த கொள்கைக்கு ஆதாரமாயது.

## சரித்திரங்கள்.

இதன் அகத்தே நபிநாயகம் முகம்மது அவர்கள், யேசு கிறிஸ்து நாதர், புத்தபிரான், சைவசமயாசாரியர், சந்தானசாரியர், திருவள்ளுவ நாயனர், திருமூலநாயனர் ஆகியோருடைய சரித்திரச்சுருக்கங்கள் தரப் பெற்றிருக்கின்றன.

## சமயக் கொள்கைகளும் எடுத்துக்காட்டுகளும்.

கடவுள் ஒருவர் உளர் என்று ஒப்புக்கொள்வனவாகிய இஸ்லாம் கிறிஸ்துவம் சைவம் ஆகிய சமய நூல்களிலிருந்து கடவுளிலக்கணமும் ஆன்மாக்களாகிய எம்பொருட்டுக் கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து அருட்டொழில்களையும் செய்கிருரென்பதும், நல்வினை தீவினைகள் எவை என்பதும், நல்வினைகளால், இன்பத்தையும் தீவினைகளால் துன்பத்தையும் நாம் நிச்சயமாய் அடைவோமென்பதும், மோட்ச நரகங்கள் உள என்பதும், சந்தேக விபரீத மறக்காணுமாறு எடுத்துக்காட்டுகள் எடுத்துத்தரப்பெற்றிருக்கின்றன.

பௌத்த நூல்களிலிருந்து, நல்வினை தீவினைகள், நல்வினை தீவினைப் பயன்கள், சுவர்க்க நரகங்கள்உள என்பதற்கும், பௌத்த, சைவநூல்களிலிருந்து மறுபிறப்பு உளது என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் தரப்பெற்றிருக்கின்றன.

எந்தச் சமயத்தின் ஆசாரியர்களாயிருந்தாலும், சமய ஆசாரியர்களாயிருந்தோர் அருளாளர்களாயேயிருந்தனர் என்பதை இங்கே தரும் சரித்திரங்ககள் இனிது காணத்தரும்.

கடவுள், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், உயிர், நல்வினை, தீவினை, இன்பம், துன்பம், சுவர்க்கம், நரகம் என்பன

வாய் வருவனவற்றின் கீழே ஒவ்வொரு சமயப்பிரிவிலும் அவ்வச்சமய நூல்களிலிருந்து எடுத்துத்தந்திருக்கும் வாக்கியங்களின் பொருள்களைக் கூர்ந்து நோக்கும் பொழுது கடவுளர் பலரல்ல ஒரு கடவுளே உளர். அவரே இம்மண்ணுலகோடு ஏனைய உலகங்களையும் உயிர்களுக்கு வேண்டியவற்றையும் படைத்து, காத்து, இன்பதுன்பங்களையும், சுவர்க்க நரகங்கள் முதலியவற்றையும் தந்து, எஞ்ஞான்றும் எல்லாவற்றையும் ஆண்டு வருகின்றார் என்பது நன்குபுலப்படும்.

கடவுள் என்று ஒரு பொருளுண்டென்று ஒப்புக்கொள்ளாதவர்களாகிய இலங்கைப் பௌத்த சமயிகளின் பொருட்டு பௌத்த நூலும் சைவநூலும் ஒப்புக்கொள்வனவாகிய நல்வினை, தீவினை, அவற்றால் வரும் இன்பதுன்பம், சுவர்க்க நரகம் ஆதியவை எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றன. சிங்களர், தமிழர், பௌத்தர், சைவர், கிறிஸ்தவர் இஸ்லாமியர் என்ற வெளிப்பேதங்களுள்ளே உயிர்வாழ்க்கையின் உட்பக்கத்திலுள்ள ஒரே தன்மை இவற்றால் அறியவரும்.

கிறிஸ்தவ, இஸ்லாமிய நூல்களின் எடுத்துக்காட்டுகளுக் கெதிரேயுள்ள எண்களில் முந்தியது அதிகாரத்தையும் பிந்தியது வசனத்தையும் குறிக்கும்.

## எடுத்துக்காட்டு மொழிபெயர்ப்பு.

கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த நூல் எடுத்துக்காட்டுகளுட் பல எம்மாலேயே மொழிபெயர்க்கப்பெற்றன. சில இடங்களில் குறித்த வசனங்களின் சாரமே தரப்பெற்றது. இவற்றில் வழூஉக்கள் காணவரின் அவற்றை எடுத்துக்காட்டுமாறு அச்சமய அறிஞர்கள் அன்புடன்வேண்டப்படுகின்றனர். தருணம் வாய்க்குமிடத்து வேண்டிய திருத்தங்கள் செய்யப்பெறும்.

### பிழைதிருத்தமும் பிற்குறிப்பும்

காணவந்த பிழைகளுக்குத் திருத்தங்கள் தரப்பட்டிருக்கின்றன. வேறுபிழைகளும் காணவரின் அன்பர்கள் எடுத்துக் காட்டுவார்களாக. அடுத்த வெளியீட்டில் வேண்டிய திருத்தங்கள் செய்யப்பெறும்.

இஸ்லாம், கிறிஸ்துவம், பௌத்தம் ஆகியவற்றுடன் சித்தாந்த சைவம் ஒன்றுமே எடுத்துக் காட்டியது, அதை அநுட்டிப்போரே இலங்கையில் இந்துமதத்தினருள் மிகப் பெருந் தொகையினராதலின் என்பது குறிப்பிடவேண்டியது.

## நன்றியுரை.

இந்நூலை அன்புடன் பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்து முகவுரை மதிப்புரைகளை மனமுவந்துதந்த பெரு மக்கள் பேரின்பப் பெருவாழ்வுக்குரியராகிய சிவதொண்டர்களாகலின், அவர்களுக்கு ந ன் றி யு ரை என்பது நாவாற் சொல்லுந்தரத்ததாகமாட்டாது. ஆகவே, தமக்கு உரியதாகிய பேரின்பப் பெருவாழ்வை அன்னார் இனிது எய்துவாராக என்று வாழ்த்தி மன மொழி மெய்களால் இறைவன் திருவடிகளை வழுத்தி நிற்கின்றேம்.

## நிறைவுரை.

இ ங் கே காணக்கிடக்கின்றவற்றை வா சி த் து யோசித்துத் தெளிந்து வாழ்கையிலமைக்கும் பேறுடைய சகோதர சகோதரிகள் ஒவ்வொருவரும் இறைவன் திருவருளால் இவ்வுலகிலேயே இன்பவாழ்க்கை எய்துவரென்பது திண்ணம். இறைவன் திருவருட்கருணை மழை இனிது பொழிக. சுபம்.

இவை எப்பவோ முடிந்த காரியம்; முழுதுமுண்மை.

சரசாலை,
7-11-52

ச. தியாகராசா.

சிவமயம்

## கடவுள் வணக்கம்

### காப்பு.

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்"

### சிவபெருமான்.

"நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம் பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் னடியேனை யுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே".

### சமயாசாரியர்.

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி".

### சந்தானாசாரியர்.

சிவஞான போதமுதல்சித்தியொடு பதினன்காம் நூல்கடம்முள்
சிவஞான போதமுதலான வுடன்சித்திக்கும் வீடுமீவான்
எமையாளும் மாபரன்றன் சந்நிதியிலெந்நாளு மிறைஞ்சும்நந்தி
தமைநாளும் போற்றியருள் சந்தானகுரவர்தாள் போற்றினேமே

### குரு.

சிவயோக நாதனெனத் திருவுருவமிந்நாளிற் கொண்டேயிங்கு
பவமோகந்தனை நீக்கி யொளிநெறியை யடியவர்க்கின்னருளா
லீந்து
சிவபோக வானந்தவெள்ளத்து ளெஞ்ஞான்றுந் திளைப்பான்
வைத்த
சிவசோதி யெம்பெருமான் திருவடிகளெந்நாளும் சிரமேல்
வைப்பாம்.

# நபிநாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் சரித்திரம்.

நபிநாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் இற்றைக்கு ஏறக் குறைய 1400 ஆண்டுகளுக்கு முன்னே அராபிய தேசத்தில் மக்கம் நகரத்தில் திருவவதாரஞ்செய்தார். இவர் ஹஸ்றத் முகம்மது என்னும் பெயருடன் இளமையில் பெற்ரேரைஇழந்து மந்தை மேய்ப் பவனுய் வாழ்ந்தார். ஆறும் ஆண்டினராயபொழுது ஒருநாள் காபிரி யேல் என்னுந்தேவதூதன் ஞானசாரியனுய்த் தோன்றி அவருக்கு அருள்வாழ்வு எய்துவித்தனர். அவர் அன்றுதொடக்கம் தியானத்தி லிருந்து அருட்சேர்க்கையாலாகும் பேரின்பம் அநுபவிக்கத் தொடங் கினுர். இங்ஙனம் நிகழுங்காலத்தில் வர்த்தகஞ் செய்யத்தொடங்கி அதிலும் பெரும் சித்தியெய்தினுர். அவருடைய ஆற்றலையறிந்த பெருஞ் செல்வியாகிய கதீஜா என்னும்பெண்மணி தனது வர்த்தகத் தொழிலுக் குத் தன் பிரதிநிதியாக அவரை அமைத்தார், அத்துறையில் அமர்ந்து வாழுங்காலத்தில் அவர் அப்பெண்மணியையே திருமணஞ்செய்யத் திருவருள்வழி நேர்ந்தது, இல்வாழ்க்கை ஒருபுறம் இனிது நிகழ்ந்தது. மற்றெருபுறம் ஹீரு என்னும் குகையுள்ளே தியானத்திலிருந்து பேரின்பசமாதிபெறும் வழக்கமுடையராயினர். இந்த வழக்கமே வளர்ந்து இஸ்லாம் சமயநூலாகிய கூரானைத் தருதற்கு ஏதுவா யிருந்தது.

நபிநாயகம் அவர்கள் கடவுள் ஒருவரேஉளர் என்று தமது அநுபவத்தில் உணர்ந்தார். அவ்வுண்மையை நிலைநாட்டிக் கடவுளின் திருவருட்சிறப்புக்களை விளக்கி அவற்றுக்குத்தகுந்த உயர்ந்த வாழ்க்கை நெறியை மக்கவாசிகளுக்கு உபதேசித்தார், அக்காலத்தில் அராபிய மக்கள் சமுகத்தில் குடிவெறி, கொலை, கொள்ளை, வியபி சாரம் முதலியன மிகமலிந்து தாண்டவமாடின. இத்தகைய தீ நெறிகளிற் செல்வோர் நபிகள்மீது அழுக்காறுற்று அவருக்கு ஊறு செய்ய எத்தனித்தனர். இதனுல் அவர் மெக்காவை விட்டு மெடினு வுக்குச்செல்ல நேர்ந்தது. அங்கே அவருடைய உபதேசத்தைக் கேட்டபலர் அவர் உபதேசித்த இஸ்லாம் சமயத்தைத் தழுவினர். நபிகளின் உபதேசவழி ஒழுகிவந்த மக்கவாசிகள் பலர் அங்கே வாழ

இயலாமல் வந்தது. அவர்களும் மெடினவுக்குச் சென்ருர்கள். அங்கே அவர்கள் வரவேற்கப்பெற்று இன்புற்று வாழ்ந்தனர்.

இவ்வாறு இஸ்லாம்சமயத்தைத் தழுவி யொழுகியவர்களை உறுப்பினராகக்கொண்ட படைகளைத் தொகுத்தார். தாமே சேனுபதியானர். தம்முடன் முரணிய மக்கவாசிகளுடன் சமர்செய்து அவர்களை வென்ருர். இதன்பின் பலகூறுகளாகத் துணிக்கப்பட்டிருந்த அராபியதேசத்தை ஒன்ருக்கித் தகுந்த திட்டம் வகுத்து, அரசாங்கம் நிறுவி இராச்சியபரிபாலனம் இனிது செய்தார்.

எனவே, இவர் இளமையிற் பெற்ருேரை யிழந்து, மந்தை மேய்ப்பவனுய், வணிகனுய், இல்வாழ்வானுய், சேனுபதியாய், அரசாங்க சிற்பியாய், அரசரேருய் வாழ்ந்து, இவையெல்லாம் அவர் வாழ்க்கையின் அணிகலன்களாயமைய நபிநாயகமாய் விளங்கி, மானுடயாக்கையை நீத்துப் பேரின்ப சாந்திநிலையை எய்தினரென்ப.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## இஸ்லாம் சமயம்.

இஸ்லாம் என்பது கடவுளுடைய ஆணைக்குள் முழுதும் அமைதல் என்றும் சாந்திக்குட்பிரவேசித்தல் என்றும் பொருள்தரும். எனவே, கடவுளுடைய ஆணைப்படிவாழ்ந்து சாந்தியடையும்வழி இஸ்லாம் சமயம் என்பது பெறப்படுகின்றது. இந்த வழியை விளக்கும் நூல் திரு கூரானுகும்.

### கூரான்.

கூரான் என்பது அகில அண்டங்களுக்கும் முதல்வரும் பேரறிவு பேராற்றல் உடையருமாகிய கடவுளுடைய திருவருளாலே நபிநாயகம் முகம்மது (ஸல்) அவர்களுடைய திருவுள்ளத்திலிருந்தெழுந்த அருள்மொழித்திரட்டாகும், (26: 192-193. 39: 1, 75: 17) இதிலே காணக்கிடக்கும் பொருள்களுள் இவ்வெளியீட்டுக்குவெண்டியவையே எடுத்துக் காட்டப்பெறும்.

இந்நூலிலே நபியவர்கள் உலகமக்கள் யாவருக்கும் வழிகாட்டியாயமைகிருரென்று சாதிக்கப்படுகின்றது, ஒவ்வொரு சாதியாருக்கும் வேண்டிய தீர்க்கதரிசிகள் காலத்துக்குக் காலம் வந்தன

றென்றும், தீர்க்கதரிசிகளைப்பெறுமல் ஒருசாதியாருமே யிருக்கவில்லை யென்றும், (13; 7, 10; 47, 35: 24) இது கூறுகின்றது, பின்வருவனவற்றை இதிற் காணலாம்.

## கடவுள்.

கடவுள் ஒருவரேஉளர் (2: 163. 16: 51) அவருடைய திருநாமம் அரபுமொழியில் "அல்லா" என்பதாகும். இச்சொல் கடவுளிலக்கணங்க ளெல்லாவற்றையும் தொகுத்துக் குறிக்கும்.

கடவுள் எங்குமுள்ளவர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிபவர், எல்லாவற்றுக்கும் ஆதியும் அந்தமுமாயிருப்பவர், (3: 17. 6; 59. 57: 1-4) அவர் வானங்களையும் பூமியையும் மற்றெல்லாவற்றையும் படைத்து எல்லாவற்றுக்கும் முதல்வராய் நடத்துகிருர், (10; 3. 39; 62) வானத்தையும் பூமியையும் அவற்றுக்கிடையிலுள்ள ஏல்லாவற்றையும் படைத்தும் அவர் எவ்வாற்ருனும் இளைப்பிலர், (50: 38) அவர் அகில அண்டங்களுக்கும் தனி முதல்வர். பரமகருணாநிதி. நியாயத்தீர்ப்புநாள்முதல்வர். வானங்களுக்கும் பூமிக்கும் முதல்வராயிருந்து மக்கள் மனம் வாக்குக் காயங்களால் இயற்றுவன எல்லாம் அறிபவர், (1: 1-3. 6: 3).

கருணைபுரிதற்காகவே கடவுள் மக்களைப்படைத்தார். மக்களுக்குப் புகலிடம் அவரேயன்றிப் பிறிதில்லை. அவர் தீமையில்லார், அறியாமையால் தீமைசெய்யினும் பின் நல்வழி ஒழுகுவோரை மன்னித்து இரங்கி அருளுபவர். பரமகருணாநிதி. அவருடைய தண்டனையைத் தவிர்க்கமுடியாது. அவர் தருந்தண்டனையுங் கருணையேயாகும், (11: 119, 42: 31, 4; 40. 6: 54. 6; 148).

## படைத்தல்.

வானங்களையும் பூமியையும் மலைகள் முதலியவற்றையும் மலைகளில் உணவுப்பொருள்களையுங் கடவுள் படைத்தார். பூமியை உயிர்வாழ்தற்கிடமாயமைத்தார். மரத்தொகுதிகள் பழவகைகள் தானியங்கள் முதலியவற்றை அங்கே உண்டாக்கினுர். களிமண்ணிலிருந்து மனுஷனைப்படைத்து, ஒருகால அளவுங்குறித்துத் தனது ஆவியைச் சுவாசித்தார். (49; 9-12. 55: 10-11. 6: 2. 32: 9).

## காத்தல்.

கடவுளர்பலரன்றிக் கடவுள்தாமே ஒருவராய், நித்தியராய், சுதந்திரராய் உயிர்களின் சீவனத்துக் காதாரமாயிருக்கிருர். அவர் தூக்கமோ ஆழ்ந்த நித்திரையோ செய்வதில்லை. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அவருடையனவே. அவருடைய ஆணையாலன்றி ஒரு மத்தியஸ்தர் இருக்கமுடியாது, அவர் எல்லாம் அறிகிருர். அவர் அறிபவற்றில் அவர் திருவுளங் கொள்வனவற்றையன்றி எதையும் அவர்கள் அறியமுடியாது; அவருடைய அறிவு வானங்களுக்கும் பூமிக்கும் அப்பாற்பட்டதாயிருக்கின்றது. அவற்றைப் பாதுகாப்பதில் அவருக்கு இளைப்பு உண்டாவதில்லை அவர் ஒப்பில்லா முழுமுதல்வராயிருக்கிருர், வானங்களையும் பூமியையும் படைத்தகடவுளே உங்கள் முதல்வர். அவர் சிம்மாசனத்திலிருந்து அவற்றை முறைப்படி நடத்துகிருர். ஒரு மக்கட்டொகுதியினருக்குத் துன்பங்கொடுக்கக் கடவுள்நினைத்தால் அதைத் தடுக்கமுடியாது, அவரைத்தவிர வேறுபாதுகாவலன் அவர்களுக்கில்லை. (2; 255. 10: 3. 13; 11).

## அழித்தல்.

அவரே உங்களை உலகிற் பெருக்கிஞர். அவரிடமே நீங்கள் சேர்க்கப்படுவீர்கள். அவரே உயிர்வாழ்தலை ஆக்கிச் சாக்காட்டையுஞ் செய்கிருர். இராப்பகல் மாறுதல் அவருடைய ஆளுகைக்குள்ளேயே நிகழ்கின்றது. (23: 79—80).

## மறைத்தல்.

எவர்படைக்கிருர், எவர் திருப்பிப் படைக்கிருர், எவர் உங்களுக்கு வானத்திலும் பூமியிலுமிருந்து உயிர்வாழுதற் காதாரமாயிருக்கிருர். கடவுளுடன் மற்ருெருகடவுள் இருக்கிருரா? எச்சரிக்கை செய்தாலென், செய்யாவிட்டாலென் நம்பாதவர்கள் நம்பமாட்டார்கள். அவர்களுடைய இருதயங்களிலும் கண்களிலும் காதுகளிலும் அவர் மூடியிட்டுருக்கிருர். (27: 64. 2: 6—7).

## அருளல்.

அவர் விரும்புகிறவர்களை நல்வழியில் நடத்துகிருர். அவர் விரும்புகிறவர்களுக்குச் சாந்திநிலையமாகிய மோட்சத்தைக் கொடுக்கிருர். (10: 25).

## மரணத்தின்பின் மனிதர் நிலை.

உங்கள் பண்புகளைமாற்றி நீங்கள் அறியாத நிலைமையை எய்துவிக்கும்பொருட்டு உங்கள் மத்தியில் சாக்காட்டை நியமித்திருக்கிறோம், எம்மை வெல்ல முடியாது. (56: 60—61) உங்கள் முதல் வளர்ச்சியை அறிவீர்கள். ஏன் பொருட்படுத்துகிறீர்களில்லை. (56: 62).

[ மொழிபெயர்ப்பாசிரியர் இது ஓர் உயர்ந்த நிலைமை எய்துதலைக் குறிக்குமென்று அடிக்குறிப்பிட்டிருக்கின்றனர் ].

## நல்வினை.

கடவுள், நியாயத்தீர்ப்புநாள், தேவதூதர் வினைக்கணக்குப் புத்தகம், தீர்க்கதரிசிகள் ஆதியவற்றில் நம்பிக்கை யுடையராய், இனத்தவர் அனாதைகள், வறியவர், வழிப்போக்கர், பிச்சைக்காரர், நோயாளர் முதலியோருக்குத் தம்செல்வத்தைக் கடவுள்மீதுள்ள அன்பால் ஈந்து, விதித்த வரிகொடுத்து, செபம்செய்து, ஒரேகடவுளன்றி வேறுகடவுள் உண்டெனக் கொள்ளாது, பெற்றோரில் அன்புடையராய் நீதிப்படி நிறைப அளந்தும் நிறுத்தும் கொடுத்து, தனிமையாய்த் தகுதியுடையவராயிருப்பவர்கள், முறையான விவாகம் செய்து, இரத்தம், பன்றியிறைச்சி முதலியவற்றை நீக்கி, கடவுளுடைய திருநாமம் உச்சரிக்கப்பெற்ற உணவை உண்டு, வெறுப்புக் காரணமாயும் கடுவுநிலைமை தவறாது ஒழுகி, பகற்பொழுது உபவாசஞ்செய்து றம்ஸான் விரதம் அனுட்டித்து, மற்றைய சமுகத்தினரை அவமதியாது தற்பெருமை தற்புகழ்ச்சியின்றி சகோதர மனப்பான்மையுடையராய், பொறுமை, சத்தியம், கீழ்ப்படிவு, தருமம், மன்னிப்புக்கேட்டல் ஆதிய ஒழுக்கமுறைகளை மேற்கொண்டு, தூய்மையடையும் நோக்கத்துடன் கருமஞ்செய்து, கடவுள்தருவதைப் பொறுமையுடன் ஏற்று வாழ்தல் நல்வினைகளைச் செய்துவாழும் நன்னெறியாகும், (2: 177. 6: 152—153. 24: 32. 5: 3. 5: 8. 23: 185—187. 49: 11. 15: 47. 3: 16. 23: 4. 31: 17).

## தீவினை.

### கொலை.

விதிக்கப்பட்ட எல்லைகடந்து கொலைசெய்பவர்கள் துன்பமான தண்டனைக்காளாவர். நீதியை நிலைநாட்டுதற்கன்றி உயிர்க்கொலை செய்யாதிருப்பீர்களாக. (2: 178. 6: 152, ).

### பொய்.

மனத்தில் ஒன்றிருக்க நம்பிக்கையுடையார்போல் வாக்காற் பொய்சொல்பவர்கள் இம்மையில் அவமானமும் மறுமையிற் பெருந் துன்பமும் பெறுவர். பொய்சொல்லாதீர்கள். பொய்ச்சாட்சி சொல்லாதவர்கள் மகிமையுடன் செல்கின்றார்கள். அறிந்துகொண்டு பொய்ச்சத்தியம் செய்பவர்கள் கொடியதண்டனைக்காளாவர். (5: 41. 16: 116. 26: 72. 58; 14—15. ).

### களவு.

களவுசெய்பவர்களின் கைகளை வெட்டுவீர்களாக. (5: 38. ).

### கள் (மது).

மதுபானமும் சூதும் பெரும்பாவமெனச் சொல்வீராக. நம்பிக்கையுடையவர்களே மதுபானத்தையுஞ் சூதையுஞ் தவிர்ப்பீர்களாக. அவை உங்கள் மத்தியில் வெறுப்பையும் விரோதத்தையும் உண்டாக்கிக் கடவுள் வழிபாட்டையும் மறக்கச்செய்யும். (2: 219. 5: 90—91. ).

### காமம்.

அவமானமுந் தீமையுமுடையதாகையால் வியபிசாரத்துக்குக் கிட்டவுஞ் செல்லாதிருப்பீராக. கடவுளிலும் நியாயத்தீர்ப்புநாளிலும் நம்பிக்கையுடையீராயின் வியபிசாரஞ்செய்யும் ஆண்பெண்களுக்கு நூறுநூறு அடி அடிப்பீர்களாக. (24; 2. ).

### கடுவட்டி

கடுவட்டிவாங்குவோர் உய்யமாட்டார்கள். கடவுள் அதை விலக்கியிருக்கிறார். (2: 275. ),

### நல்வினை தீவினைக் கணக்கு.

மக்கள் வாழ்க்கையிலே வேண்டப்படுகிற பாதுகாப்பாளரைக் கடவுள் நியமித்திருக்கிறார். அவர்கள், மக்கள்செய்யும் நல்வினை தீவினைகளை, ஒருசிறிதும் பிழையாது நீதியாய்க் கணக்கிட்டு வைக்கின்றனர், (82; 10—11. ).

### மோட்ச நரகங்கள்.

யார் இகவாழ்வை விரும்புகிறாரோ, நாம் யாருக்கு எதை விரும்புகிறோமோ அதை அங்கே விரைந்தமைக்கிறோம். பின்

அவருக்கு நரகத்தை நியமிக்கிறோம். இகழப்பட்டுத் துரத்தப்பட்டு அதிற் பிரவேசிப்பர். யார் நம்பிக்கையுடையராய்ப் பரவாழ்வை விரும்பி, வேண்டியவாறு முயல்கின்றாரோ அவர் முயற்சி அன்புடன் ஏற்கப்படும். நாம் எப்படிச் சிலரை மற்றவர்களிலும் மேன்மைபெற அமைத்திருக்கிறோமென்பதைக் காண்க. உண்மையாகவே பரவாழ்வு அளவிலும் மேன்மையிலும் மிகமேலானது. (17: 18—19. 17: 21).

## தொகுப்புரை.

இஸ்லாம் என்பது கடவுளுடைய ஆணைக்குள் அடங்கி வாழ்ந்து சாந்தியெய்தும்வழி. அவ்வழியை விளக்குவது திருகூரான். கடவுள் ஒருவரே உளர், மக்களாகிய எமக்காக, அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து அருட்டொழில்களைச் செய்கின்றார்;

மக்களாகிய நாங்கள் இங்கே காணக்கிடக்கும் நல்லனவற்றைச் செய்து தீயனவற்றை யொழித்து மற்றவர்கள்மீது சகோதரபான்மையுடையராகிக் கடவுளை வழிபட்டு வாழுதல் வேண்டும்;

நாங்கள் செய்யும் நன்மை தீமைகள் நன்கு கணக்கிடப்பெறுகின்றன: அவற்றுக்குத்தக்க இன்பதுன்பங்களைத் தரும் மோட்ச நரகங்களை எமக்குக் கடவுள் தருகின்றார் என்பன திரு கூரானிலே தெரியவரும். சாதாரணமாக மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாது வேண்டப்படுவனவெல்லாம் ஈண்டுக் கூறப்பெற்றிருத்தல் காணக்கிடக்கின்றது.

# இயேசு கிறிஸ்துநாதர் சரித்திரம்

இயேசு கிறிஸ்துநாதர் இற்றைக்கு 1954 ஆண்டுகளுக்கு முன்னே யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே கடவுளுடைய ஆணைப்படி கன்னிகையாகிய மரியாள் என்னும் அம்மையாருடைய மகனைத் திருவவதாரஞ் செய்தார்.

அவர் ஏறக்குறைய முப்பதாம் ஆண்டினராயபொழுது யோர்தான் நதியிலே யோவான்ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினவுடனே, வானந் திறக்கப்பட்டதையும் தேவ ஆவியானவர், தம்மேல், புறாவைப்போல் வந்திறங்குவதையுங் கண்டார். இவர் என்னுடைய நேசகுமாரன் இவரிற் பிரியமாயிருக்கிறேன் என்று வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாயது.

பின்பு ஆவியானவரால் வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே நாற்பதுநாள் உபவாசஞ் செய்தபின் அவருக்குப் பசியுண்டாயிற்று, அப்பொழுது பிசாசினால் பலவாறு சோதிக்கப்பட்டார், தன்சோதனைக்கு அவர் இடங்கொடாததால் பிசாசானவன் அவரை விட்டுப் போனான்.

அதன்பின் அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகும் பொழுது மீன்பிடிக்க வலைபோட்டுக்கொண்டிருந்த சீமோன், அந்திரேயா என்னும் இரு சகோதரரை நோக்கி, என்பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். அவர்கள் அவருக்குப்பின் சென்றார்கள். தங்கள்வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்த யாக்கோபு, யோவான் என்னும் இரு சகோதரரையும் அழைத்துச் சென்றார். அவர் கலிலேயா எங்கும்சுற்றி உபதேசித்துப் பல நோயாளிகளைச் சுகப்படுத்திச் சென்றபொழுது திரளான சனங்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். மலையின்மேல் ஏறி உட்கார்ந்து, தாழ்மை, இகவாழ்வின் தன்மையை நினைந்து துயரப்படுதல், சாந்தகுணம், நீதி, இரக்கம், இருதயசுத்தம், சமாதானம் ஆகியவற்றால் வரும் நன்மைகளை விளக்கினார். மேலும், குஷ்டரோகம், திமிர்வாதம், சுரம், பிசாசு முதலியவற்றை நீக்கி, மரித்தபெண்ணை எழுப்பி, குருடர்கண்களைத் திறப்பித்து, ஊமையைப் பேசுவித்து மேலும் பல அற்புதங்களைச் செய்தார்.

இவ்வாறு நிகழ்ந்தபொழுது வேலை அதிகரித்தது. அவர் பேதுரு முதலிய தம்முடைய சீடர்கள் பன்னிருவரை நோக்கிப் புறச்சாதியார் நாடுகளுக்குப் போகாமல், சமாரியர் பட்டினங்களுட் பிரவேசியாமல், காணுமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடம் போகும்படி கட்டளையிட்டு அசுத்த ஆவிகளைத் துரத்தவும், எல்லா நோய்களையும் நீக்கவும், அதிகாரங் கொடுத்து, "பரலோக இராச்சியம் சமீபித்திருக்கிறது எனப் பிரசங்கியுங்கள் என்று அனுப்பினுர்.

அவருடைய உபதேசங்களைக் கேட்டுச் சனங்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்ருர்கள். அப்படிச்சென்ற இருஇடங்களில் ஐந்து அப்பத்தை ஐயாயிரம்பேருக்கும், ஏழுஅப்பத்தை நாலாயிரம்பேருக்கும் பங்கிட்டு மீதிகாண்டல், கடல்மேல் நடத்தல் ஆகிய அற்புதங்களையுஞ் செய்தார்.

ஒருநாள், பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரையுங் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்தமலையின்மேற்போய் அவர்கள் முன்னில் மறுரூபமானுர், மோசேயும், எலியாவும் அவருடன் பேசுவதாகக் காணப்பட்டது. பேதுரு. இயேசுநாதரை நோக்கி ஆண்டவரே, இங்கே இருத்தல் நன்று என்று பேசும்பொழுது ஒளியுள்ள ஒருமேகம் அவர்கள்மேல் நிழலிட்டது, இவர் என்னுடைய நேச குமாரன் இவரிற் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று. சீடர்கள் அவற்ருல் அச்சங்கொள்ள அவர்களைத்தேற்றித் தாம் மரித்து எழுந்து இருக்கும்வரையில் இத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும்படி கட்டளையிட்டார். பின்னரும் பல அற்புதங்களைச்செய்து போதித்து வேண்டிய இடங்களில் வேதபாரகர் பரிசேயர்களின் செய்கைகளைக் கண்டித்தார். அவர்கள் அவரைக் கொல்ல நினைத்து வழிதேடினுர்கள்.

பொருளாசை மயக்கத்தால் சீடரிலொருவனுகிய யூதாஸ்காரியோத்து பரிசேயர்களிடம் பணம்பெற்றுக்கொண்டு அவரைக்காட்டிக் கொடுத்தான். கொலைசெய்யும் ஆலோசனையுடன் தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் அவரை ஒப்புக்கொடுத்தார்கள். அவர்மீது குற்றமொன்றுங்காணுதபடியால் தேசாதிபதி அவரை விடுதலை பண்ண நினைத்துச் சனங்களின் விருப்பத்தைக் கேட்க, அவர்கள் பிரதான ஆசாரியர் மூப்பர் ஆகியோரின் ஏவலின்படி அவரைச் சிலுவையி லறையவேண்டுமென்று கூக்குரலிட்டுச் சொன்னுர்கள். அப்படியே சிலுவையிலறையப்பட்டு ஆவிநீங்கியது.

அவர் மூன்றும்நாள் உயிர்த்தெழுந்து யூதாஸ்காரியோத்து ஒழிந்த பதினொரு சீடர்களையும் நோக்கி, நீங்கள் புறப்பட்டுச் சகலசாதிகளையும் சீடர்களாக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டவற்றைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். உலகமுடிவுவரையும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்றார். இவ்வாறு பேசியபின் அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுத் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார், (ஆமென்.)

## கிறிஸ்து சமயம்.

கிறிஸ்து சமயம் என்பது கிறிஸ்து நாதரைத் தலைவராகவுடையது. கிறிஸ்து சமயநூல் சத்தியவேதமென்றும் விவிலியநூல் என்றுங் குறிக்கப்பெறுகின்றது.

## சத்திய வேதம்.

சத்தியவேதம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளையுடையது. பழைய ஏற்பாடு, பழைய தீர்க்கதரிசனங்கள், நியாயப்பிரமாணங்கள் ஆகியவற்றையுடையதாய் ஆதியாகமம் முதலாக, மோசே, யோசுவா முதலியோர் தந்த புத்தகங்களாகும். புதிய ஏற்பாடு, கிறிஸ்துநாதருடைய சரித்திரம் உபதேசங்கள் ஆகியவையடங்கிய மாற்கு முதலியோர் சுவிசேஷங்களும் அப்போஸ்தலரெழுதியவையுமாகும். நியாயப்பிரமாணத்தை யானாலும் தீர்க்கதரிசனங்களை யானாலும் அழிக்கவந்தேனென்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுதற்கே வந்தேன், (மத். 5: 17) எனக் கிறிஸ்துநாதர் கூறியதால், பழைய ஏற்பாடும், கிறிஸ்து சமயநூலாத லறியக்கிடக்கின்றது. பின்வருவன இவற்றிற் காணக்கிடக்கின்றன.

## கடவுள்.

கடவுள் ஒருவரே உளர். அவர் தனி முதல்வர். எல்லாம் அறிபவர். சர்வ வல்லமையுள்ளவர். யேகோவா என்பது அவரது திருநாமம்: அவர் பூரண சற்குணர். அவராலேயே எல்லாம் உண்டாயிற்று. (மாற். 12: 29, லூ. 10: 21. யோ. 17: 3. மத். 6: 8. யாத். 6: 2—3. மத். 5: 48, யோ. 1: 3).

## அவர்செய்யும் ஐந்து அருட்டொழில்கள்

### (1) படைத்தல்

கடவுள் வானத்தையும் பூமியையும் சூரிய சந்திரர் முதலிய எல்லாவற்றையும் படைத்து, பூமியில், தாவரம் பறவை ஊர்வன நீர்வாழ்வன முதலிய எல்லாவற்றையும் படைத்து, மனுஷனைத் தன் சாயலாகப்படைத்து விதைதரும் சகல பூண்டுகளையும் கனிதரும் சகல மரங்களையும், மனுஷனுக்கு ஆகாரமாகப் படைத்தார் (ஆதி 1: 1—31. யோ. 1; 3).

தாவரங்களுடன் நடமாடுகிற சகல பிராணிகளும் ஆகாரமாயமைக்கப்பட்டன. தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணினாலே மனுஷனை உருவாக்கி சீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் சீவாத்துமாவானான், (ஆ. 9: 3. 2: 7),

### (2) காத்தல்

உங்கள் பிதாவை நோக்கி, நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னரே [illegible]ங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். ([illegible] 6: 8) ஒருகாசுக்கு இரண்டு அடைக்கலாங்குருவிகளை விற்கிறார்களல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையில்விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன, (மத். 10; 29—30).

### (3) அழித்தல்

இவ்விடத்தில் ஒருகல்லின்மேல் ஒருகல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 24; 2). அறுப்பு உலகத்தின்முடிவு, அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். (மத். 13: 39). இன்னும் ஏழுநாள்சென்றபின்பு, நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி நான் உண்டாக்கின சீவசந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடிக்கு நிக்கிரகம்பண்ணுவேன் என்றார். (ஆதி. 7: 4), சலப்பிரளயம் பூமியின்மேல் உண்டானபோது நோவா அறுநூறு வயதாயிருந்தான். (ஆதி. 7: 6). மனுஷர்முதல் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தம் பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து அவைகள் பூமியிலிராதபடிக்கு நிக்கிரகமாயின. (ஆ. 7: 23).

## ( 4 ) மறைத்தல்

பிதாவே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். (லூ. 10: 21). ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடம் நிறைவேறுகிறது. அதாவது காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள். கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள், இந்தச்சனங்கள் கண்களினாற் காணாமலும் காதுகளினாற் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. (மத். 13: 14—15) ஆகையால் அவர்கள் விசுவாசிக்க மாட்டாமற்போனார்கள். ஏனெனில் ஏசாயா பின்னும், அவர்கள் கண்களினாற் காணாமலும் இருதயத்தினால் உணராமலும் குணப்படாமலும் இருக்கும்படிக்கும் அவர்களுடைய கண்களை அவர்குருடாக்கி அவர்களிருதயத்தைக் கடினமாக்கினார் என்றான். (யோ. 12: 39—41).

## ( 5 ) அருளல்

எப்படிப் பேசுவோம் என்றும் என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள். நீங்கள் பேசவேண்டியது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும், (மத்: 10; 19). பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான். (யோ, 3: 27). என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என்காரியமல்ல என்றார். (மத், 20; 23).

## நல்வினை

உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் : இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். (மத், 5: 37).

மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்குமுன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. (மத். 6: 1).

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். ( மத். 7; 12 ). உன் தேவனுகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்......உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாங் கற்பனை என்னவென்ருல், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன என்ருர். ( மத். 22; 37—40 ).

## தீவினை

கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. ( மத். 19: 18 ). தன் உடன் வேலைக்காரரை அடிக்கத்தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால் அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும் அவனுடைய எசமான் வந்து, அவனைக்கடினமாய்த் தண்டித்து மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாகும் ( மத், 24: 49—51 ). திராட்சரசம் பரிகாசஞ்செய்யும்; மதுபானம் அமளிபண்ணும் அதினல் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல: ( நீதி. 20: 1 ).

இவற்ருல், பொய், கொலை, களவு, கள், காமம் ஆகிய பஞ்ச மாபாதகங்கள் முதலியனவும் அவற்றின் விளைவுகளும் ஒருவாறு அறியவருகின்றன.

## மோட்ச நரகங்கள்

பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராச்சியத்தில் பிரவேசிப்பான். ( மத். 7; 21 ). மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய இராச்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போற் பிரகாசிப்பார்கள்.

கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன். (மத். 13. 41-43) என்பவை மோட்ச நரக இயல்புகளை அறியத்தரும்.

## தொகுப்புரை

கிறிஸ்து சமயம் என்பது கிறிஸ்துநாதரைத் தலைவராகவுடைய தென்றும், அதன் நூல் சத்தியவேதம் என்றும் அது பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இருபகுதிகளையுடையதென்றுங் கண்டோம். அவற்றுள், கடவுள் ஒருவரே என்றும் அவர் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து அருட்டொழில்களைச் செய்கிருரென்றும், அறிகிரேம்.,

நாங்கள் எம்மைப்போல எம் அயலவரை நேசித்து, தீயன விலக்கி நல்லனசெய்து கடவுளின் சித்தத்தின்படி வாழ்ந்தால் பரலோக ராச்சியத்திற் பங்குபெறலாம்.

# புத்தபகவான் சரித்திரம்

இற்றைக்கு ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன்னே நேபாளத்திலே கபிலவாஸ்துவென்னும் நகரத்திலே சுத்தோதனன் என்னும் அரசனுக்கு மகனாய்த் திருவவதாரஞ்செய்து சித்தார்த்தர் என்னும் பிள்ளைத்திருநாமத்தைப் பெற்றார் புத்தபிரான். அவரைப் பார்த்த அந்தண நிமித்திகரொருவரும் அசிதரென்னும் முனிவரும் அவர் துறவுபூண்டு பலவிடங்களுக்குச் சென்று தருமோபதேசஞ் செய்வாரென்று அரசனுக்குக் கூறினர்.

அவருடையபாலப்பருவத்திலேயே ஒருநாள் தேவதத்தன் என்னும் இளைஞன் ஆகாயத்திற் பறந்துசென்ற அன்னப்பறவை ஒன்றை அம்பால் எய்து வீழ்த்தினதுகண்டுமனம்பொறாது அளிகூர்ந்து இரங்கி அப்பறவையை எடுத்துத்தடவி அம்பைஇழுத்து ஆறுதல்கொடுத்தாரென்பது அவருடைய பிற்காலச் செய்கைகளுக்கு ஓர் அறிகுறியாயமைந்தது. இவர் துறவுபூணுவாரென்பதைக்கேட்ட அரசன், துறவுக்குத் துன்பமே ஏதுவென நினைத்து அவருக்கு துன்பந்தோற்றாத இன்பவாழ்க்கைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து யசோதரை என்னும் அம்மையாரை மணமுஞ்செய்வித்து எல்லாம் இன்பமயமாக்கினார்.

அரண்மனைச் சுற்றாடலுக்கு வெளியேயுள்ள மக்கள் வாழ்க்கை இத்தன்மையதென்று இதுவரையும் சித்தார்த்தர் அறிந்திலராகலின் அவர்வெளியே சென்றுபார்க்க விரும்பினார். நகர்ப்புறமெங்கும் மங்கலக்காட்சியே யமையச்செய்யுமாறு மன்னன் பணித்தனன். சித்தார்த்தர் சென்றார். எல்லாம் இன்பமயமான காட்சிகளாகவே யிருந்தன.

ஆயினும் மற்றொருபொழுது கந்தையணிந்து கண்சிவந்து பல்லிழந்து கூன்முதுகுடன் தோல்சுருங்கித் தள்ளாடி நான் நாளைக்கோ அடுத்தநாளோ சாகப்போகிறேன் என்று ஒரு வயோதிகத்தோற்றம் தெருவிலே காட்சிகொடுத்தது. இதைக்கண்டார் சித்தார்த்தர்.

மானிடவடிவத்துடன் இவ்வளவு துன்பமயமாய்த் தோற்றும் இஃதுயாது என்று சன்னா என்னும் சாரதியை வினவினார். ஓர் வயோதிகமனுஷனே, பிறிதொன்றல்ல என்றான், சாரதி. இவ்வளவு

காலம் வாழ்ந்தால் இந்நிலைமை தனக்கும் யசோதரைக்கும் ஏனை யோர்க்கும் எய்துமென்றறிந்து சித்தார்த்தர் துன்பத்துடன் திரும்பினர் மாளிகைக்கு. துன்பம்பெருகியது. தீயகனவுகண்டார் தந்தையார்.

செல்கின்றார் சித்தார்த்தர் மற்றொருநாள். மங்கலக்காட்சியே ஆணைப்படி எங்கும் மல்கியது, ஆயினும் பெருநோயாற் பீடித்த ஒருவனையும், பிணமொன்றின் தகனத்தையும் அவர்காண நேர்ந்தது. பிணி மூப்புச் சாக்காடென்னும் பேரிடர் நீக்கும்வழிகாண்பேனென்று துணிந்தார். திரும்பினார் அரண்மனைக்கு.

துறவுமேற்கொண்டு துன்பந்துடைக்கும் வழிகாண்பதே துணிந்த சிந்தையராய்ப் புகுந்தார் கானகம் ஓர் நள்ளிரவில். துறவியாய்ப் பிச்சைக்குச் சென்றஞான்று கொல்லாமையாகிய நல்லறம் விளக்கிப் பிம்பாசரன் என்னும் அரசன் செய்யவிருந்த பசுவேள்வி ஒன்றை நீக்கினர். ஆண்டுகள் பல கழிந்தன. உன்னியதை எய்துதற்கு அவர் அயராதுழைத்தார். நைரஞ்சரை என்னும் நதிக்கரையில் நின்ற ஓர் அரசமரத்தின்கீழ் அயிலுதல் துயிலுதலின்றி இருபத்தெட்டுநாள் ஆராய்ந்திருக்க, அடைந்தார் நிருவாணதசை இருபத்தொன்பதாம் நாள். அறிவொளிபெருக அகம்நனிகளித்தார்.

அதன்பயனாய்த் துக்கம் துக்கோற்பத்தி துக்கநிவாரணம், துக்க நிவாரணமார்க்கம் ஆகியவற்றை மக்களுக்குப்போதித்து அப் போதனையை உலகிற்பரப்புமாறு புத்தசங்கத்தையும் நிறுவினர். இவருடைய போதனைகள் திரிபிடகம், தர்மபாதம் என்னும் பௌத்த சமயநூல்களாயமைந்திருக்கின்றன.

எண்பதாம் ஆண்டில் அவர் இவ்வுலகவாழ்வை ஒருவி நிர்வாண தசையை எய்தினர்

## புத்தசமயம்.

புத்தபிரானுடைய போதனைகளாகிய தர்மபாதம், திரிபிடகம் ஆகிய நூல்கள் விளக்கும் நெறி புத்தசமயமாகும். துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணமார்க்கம் ஆகிய நான்கு பெரும்பிரிவுகளுள் அவருடைய போதனைகளடங்கும்.

பிறவியொழிந்து என்றும் குன்றா இன்பநிலையாகிய நிருவாண தசையை எய்துதற்குத் துக்க நிவாரணமார்க்கத்தைக் கடைப்பிடித்த தல் வேண்டும். அது, நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை,

நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தலைப்பாடு ஆகிய எட்டு அங்கங்களையுடையது.

இந்நெறியில் ஒழுகஇயலாதவராய் இல்வாழ்க்கையில் அமர்ந்தோருக்கு 1 ஐந்து கற்பனைகள் அமைந்திருக்கின்றன. அவை, இல்வாழ்வார் நிர்வாணத்தை எய்துதற்கு முயலும் நெறியின் முதற்படியாயமைந்து பஞ்சசீலமெனக் கூறப்படுகின்றன.

## நல்வினை.

2 ஒழிக கொலை செயல் இரக்கம் பேணுவீர்
இழிதரு பிராணியும் மேலும் உயர்நெறி
ஒழித்தவராவீர் என்பது ஓர்மின்
வரையாது வழங்குமின் தருவது பெறுமின்
வலிந்தும் வஞ்சித்தும் மற்றவர் பொருள்தனை
வௌவுதலொழிக உந்தினும் வேட்கை
பகர்தலொழிக பொய் பொய்ச்சான்று பழிமொழி
அகத்தூய்மைக்கு அறிகுறி வாய்மையே
மக்கள்அறிவை மயங்கச்செய்யும்
மதுவாதிய விங்கணுக விடாதீர்
தெளிந்த சிந்தையும் தூயதேகமும்
சோமபானத்தை வேண்டுவதில்லை
பிறர்மனைபுகுதல் என்பதோடு
மறமெனுமிழிவுடை மெய்புரிதொழில்கள்
ஒழித்து வாழுவீர் ஒளிபெறுவீரே.

என்பது பஞ்சசீலங்கள் எனப்படுகின்ற, கொலை, பொய், களவு, கள், காமம் ஆகிய குற்றங்களினின்று நீங்கும் நெறியை மேற்கொள்ளுதலுடன் இரக்கம், அன்பு, ஈகை, வாய்மை, புலன்வழிச் சேறலை ஒழித்தல், அறிவொளி வளர்த்தல் ஆகிய குணங்களை ஓம்புதலாகிய ஒழுக்க முதற்படியை உரைக்க எழுந்தது. இது நல்வினை.

1 Buddhism by Rev. C. Pannalankara p. 45.
2 Light of Asia by Sir Edwin Arnold p. 151.

## தீவினை

3 உயிர்க்கொலை செய்வாரோடு பொய்மொழி மொழிவாராவோர்
தமக்கெனக் கொடாதஒன்றைக் கவர்ந்துதாம் கொள்ளும்நீரர்
அயன்மனை புகுவாரோடு அறிவொழி குடியரென்போர்
தமக்குள நிலையிழந்து தாழ்வுறல்திண்ணம் மாதோ.

என்பதனால் கொலை, பொய், களவு, கள், காமம் ஆகிய ஐந்து மாபாதகங்களும் முதற்கண் எடுத்துக் கூறப்பட்டன.

## மறுபிறப்பும் சுவர்க்க நரகங்களும்

4 மக்களுந் தேவரும் பிரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினையென் றிருவகையாற்
சொல்லப்பட்ட கருவிற் சார்தலும். (மணிமேகலை.)

என்பதனால் மக்கள் தேவர் நரகர் முதலிய பிறவிகளிற் பொருந்துதலும் சுவர்க்க நரகங்களுக்குச் செல்லுதலும் தத்தம் நல்வினை தீவினைகளுக்கேற்ற வாறு நிகழ்தல் கூறப்பட்டது. (தர்மபாதம் 21–ம் பக்கம், 126–ம் கூற்றும் இதை வலியுறுத்துகின்றது:)

## தொகுப்புரை.

பௌத்தசமயம் புத்தபகவானுடைய போதனைகளின்படியமைவது தர்மபாதம் திரிபிடகம் ஆகியவை அப்போதனைகளைத்தருவன.

அவற்றின்படி, நிருவாணதசையடைய விரும்புவோர் துக்க நிவாரணமார்க்கத்தின்பாற் பட்டனவாகிய அட்டசீலங்களை மேற்கொள்ளுவர், ஏனையோர் ஐந்து கற்பனைகளாகிய பஞ்சசீலங்களை மேற்கொள்ளுவர். மக்கள் செய்யும் நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு மறுபிறப்பும் சுவர்க்க நரகங்களுமுள.

எனவே தீவினையொழித்துத் தத்தமக்கேற்றவாறு பஞ்சசீலங்கள் அட்டசீலங்கள் என்பவற்றைப் பொருந்தி வாழுதல் நிருவாணதசை எய்துதற்கு யாவருக்கும் வேண்டப்படும் சாதனங்களாகும்.

---

3 Dharmmapada ch. 18, v. 246—247.

4 உ. வே. சாமிநாதையர் புத்தசரித்திரம் பௌத்த தருமம் பௌத்த சங்கம் 80 பக்கம்.

உ
சிவமயம்.

# சைவசமயம்.

மங்கள ரூபியாய், எங்கும் வியாபியாய், உயிர்க்குயிராய், இன்பம் பயப்பதாய், இன்பமயமாயுள்ள ஒரு பொருள் சிவம் எனப் பெற்றது. அத்தகைய பொருளே உலகுக்கு முழுமுதற் கடவுள் எனக்காண்பது சைவசமயம். சிவம் எனப்பெறும் இப்பொருள் பரமசிவம், பரப்பிரமம் எனப் பெறும் பொழுது அருவம், உருவம், அருவுருவம் என்னும் இலக்கணங்கள் கூறவொண்ணாததாய்த் தானே தனியாயுள்ளது.

சைவசமயம், தாயைப்போன்ற தன்மையுடையதாய், ஏனைய சமயங்களுக்கும் சமயநூல்களுக்கும் இயைந்த இயைந்த இடங்களை நீதியாய்க் கணித்து, அவை கூறும் பொருள்கள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டதாய், அன்பே சிவமென அன்புவளர்க்கும் சாதனங்களைச் சிறப்புறச் செப்பி விளங்குகின்றது. பிறசமய உண்மைகள் எல்லாவற்றுக்கும் இடங்கொடுத்து விளங்குதல் இதற்கொரு தனிச்சிறப்பு.

**ஓதுசமயங்கள் பொருளுணரு நூல்களொன்றோடொன்**
**றொவ்வாமலுள பலவுமிவற்றுள்**
**யாதுசமயம் பொருணூல் யாதிங்கென்னி னிதுவாகு**
**மதுவல்லதெனும் பிணக்கதின்றி**
**நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காணநின்றதி**
**யாதொருசமய மதுசமயம் பொருணூல்**
**ஆதலினு னிவையெல்லா மருமறை யாகமத்தே யடங்கியிடு**
**மவை யிரண்டு மரனடிக்கீழடங்கும்.**

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் இதை இனிது விளக்குகின்றது.

சைவசமய முதல்நூல்கள் வேத சிவாகமங்களென்பதும் இதனுல் அறிய வருகின்றது.

## சைவசமய நூல்கள்.

வேத சிவாகமங்கள் சைவசமய முதல்நூல்க ளென்பது அறிந்தோம், வேதத்தின் முடிவு வேதாந்த மெனப்பெறும். வேதாந் தத் தெளிவே சைவசித்தாந்தம் எனப்பெறும். எனவே சிவஞான போதம் முதலிய சைவசித்தாந்த சாத்திரங்கள் சைவசமய ஆதாரத் தமிழ் நூல்களாய் அமைகின்றன. இவற்றுள் சிவஞானபோதம் முதல் நூலாக ஏனையவை வழி நூல் சார்பு நூல்களாயின. தேவார திரு வாசகம், திருக்கோவையார், திருமந்திரம் முதலிய சைவத் திருமுறை களும் திருக்குறளும் இவை கூறும் பொருள்களை * வேறு வேறு முறைகளால் விளக்கும்.

> **"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்**
> **மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை**
> **திருவா சகமுந் திருமூலர் சொல்லும்**
> **ஒருவா சகமென் றுணர்."**

என்னும் ஔவைப்பிராட்டியார் திருவாக்கு இக்கருத்தை அறிவுறுத்தி இனிது வலியுறுத்து கின்றது.

இவற்றின் இயைபு காரணமாய், சந்தானசாரியர், சமயாசாரியர், திருமூலநாயனார், ஆகியோர் சரித்திரச்சுருக்கங்கள் மற்றைச் சமயமுதல் வர்களின் சரித்திரங்கள்போல் இங்கே இடம் பெறுகின்றன.

## மெய்கண்டதேவ நாயனார்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருப்பெண்ணாகடம் என்னுமூரிலே சைவவேளாண்குலதிலகராய் விளங்கிய அச்சுதகளப்பாளர் என்பவர் தமக்கிருந்த பிள்ளைப்பேறின்மையாகிய குறை நீக்கும்பொருட்டு. தமது குலகுருவாகிய அருணந்தி சிவாசாரியரிடஞ் சென்று தமது குறைநீங்கும் வழி காட்டும்படி வேண்டினர். ஆசாரியர் சைவத் திருமுறையைப் பூசித்துக் கயிறுசாத்திப் பார்த்தபொழுது "பேயடையா பிரிவெய்தும்" என்னும் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் வந்தது. அதிற் குறிப்பிட்டபடியே திருவெண்காட்டிற்குச் சென்று முக்குள நீரில் முழுகி அம்மை அப்பரை வழிபடும்படி ஆசாரியர் பணித்தார். அச்சுதகளப்பாளரும் மனைவியாரும் அங்ஙனமே செய்த

* வேத சிவாகமங்கள் முதலியவாகக் கூறப்பட்ட இவற்றுக் கிடையில் உயர்வு தாழ்வு கூறுதற்கிடமில்லை. உண்மை உணரும் பேறுடையோர் உயர்வு தாழ்வுகூற ஒருபோதும் ஒருப்படார்.

தவப்பயனுய்ச் சந்தானசாரிய முதல்வராகிய மெய்கண்டதேவ நாயனுர் திருவவதாரஞ் செய்தார். சுவேதவனப்பெருமாள் என்பது அவரது பிள்ளைத் திருநாமம்.

பரஞ்சோதி மாமுனிவர் அவருக்குத் தீக்கை செய்து மெய்யுணர் வளிக்க அவ்வுணர்வின்பயனுய்ச் சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்தத் தமிழ் முதல் நூலை எம்போன்ருர் உய்யும்பொருட்டு அவர் ஈந்தருளினுர். அதன் நுண்பொருள்களை அருணந்திசிவாசாரியார் முதலிய மாணவர்களுக்கு விளக்கியருளியபின் சமாதியிலிருந்து பரமுத்தி எய்தினர்.

## அருணந்தி சிவாசாரியர்.

திருத்துறை யூரிலே ஆதிசைவமரபிலே அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருவவதாரஞ்செய்து அவ்வூரிலுள்ளவர்களுக்குக் குலகுரு வாக விளங்கினுர். சிவாகமங்கள் எல்லாவற்றையுங் கற்றுப் பெரும் பாண்டித்தியம் பெற்றிருந்தாராகலின் அவருக்குச் சகலாகம பண்டிதர் என்னுங் காரணப்பேர் உண்டாயிற்று.

அக்காலத்தில், குழந்தைப்பருவத்தராகிய மெய்கண்டதேவநாயனுர் ஞானசாரியராயமைந்து பலசீடர்களுக்கு ஞான நூல் கற்பித்தார். இதைச் சகலாகம பண்டிதர் அறிந்து, நம்பாது தாமே பார்க்கும்படி அவரிடம் சென்றுர். அவ்வூரவர்கள் யாவரும் அவரை வணங்கி வரவேற்றனர். மெய்கண்டாரிடம் சென்றபொழுது அவர் வணங்கா திருந்தபடியிருந்து மாணவருக்கு ஆணவ இயல்பு விளக்கினுர். சகலாகம பண்டிதர் பாண்டித்தியச் செருக்குடன் அவர்முன் சென்று ஆணவசொரூபமாவ தென்னவென்று சினந்துகேட்டார். மெய்கண்ட வள்ளலோ இன்னருள்புரியும் நோக்குடன் இதுவே ஆணவசொரூபம் என்று தமது விரலால் அவரது நிலையைச் சுட்டிக்காட்டிச் சொன்னுர். அடியற்ற மரம்போல விழுந்து வணங்கினுர் சகலாகமபண்டிதர். சிவஞானபோதப்பொருள் தெளிந்தார். பின்னர் அப்பொருளைச் சிவஞானசித்தியார் என்னும் நூலில் விரித்து விளக்கி நாயனுரது முதல் மாணுக்கராய் விளங்கினுர்.

அதன்பின்பு, மறைஞான சம்பந்த சுவாமிகளுக்கு ஞானுேப தேசஞ் செய்து சிவோகம்பாவனையால் அகண்ட பரிபூரணதசை எய்தினர்.

## மறைஞானசம்பந்த சிவாசாரியர்.

மறைஞான சம்பந்த சிவாசாரியர் திருப்பெண்ணாகடத்திலே திருவவதாரஞ் செய்தார். மறைகளனைத்தையுங் கற்றுத் தெளிந்தமையால் அவருக்கு மறைஞான சம்பந்தர் என்னும் காரணப்பேர் உண்டாயிற்று. அருணந்தி சிவாசாரியரிடம் அடிசேர் ஞானம்பெற்று உமாபதி சிவாசாரியருக்கு ஞானோபதேசஞ்செய்து ஞானபூசை யியற்றியிருந்து அத்துவித முத்தியை எய்தினார்,

## உமாபதிசிவாசாரியர்.

உமாபதி சிவாசாரியர் சிவாகமங்களனைத்தையுங் கற்றுத் தெளிந்து பொன்னம்பலமுடையாருக்குப் பூசனைபுரிந்து தில்லை மூவாயிரவருட் சிறந்து விளங்கினார். ஒருநாள், பூசனைமுடிந்தபின், கொடி குடை தீபம் முதலிய விருதுகளுடன் வழக்கம்போற் சிவிகை மீதிவர்ந்து தம் வீட்டுக்குச் சென்றார். சீடர்களுடன் வழிமருங்கே யிருந்த மறைஞானசம்பந்தர் இவர் வருவதைக்கண்டு "பட்ட கட்டையிற் பகற்குருடு ஏகுதல் பாரீர்," என்றார். செவிமடுத்தார் உமாபதியார். அக்கணமே சிவிகைவிட்டிழிந்து குருபரன் தாளை யடைந்து திருவடித் தொண்டு செய்யத் தொடங்கினார். சென்றொருநாட்சேணியர் தெருவுக்கு மறைஞானசம்பந்தர். அங்கே கூழ்பெற்றுண்டார். சிந்தையிற் சிவ நிவேதனமெனக் கண்டு உண்டார் உமாபதியார் அவர் உண்ட சேடத்தை. இதை அறிந்தார்கள் தில்லைமூவாயிரவர். முறை பிறழ்ந்தாரென்றிகழ்ந்து கூத்தப் பெருமானுக்கு உமாபதி சிவாசாரியர் பூசனைபுரிதலே பிழையெனத் தடுத்தார்கள். கொற்றவன் குடியிலே மடமொன்றியற்றி அங்கே கூத்தப்பெருமானுக்குப் பூசனைபுரிந்தமர்ந்தார் உமாபதியார்.

சிதம்பர நடேசர் உற்சவகாலம் வந்தணைந்தது, உமாபதியாரையின்றியே கொடியேற்றமுயன்றனர் தில்லைவாழந்தணர். ஏறுதலொழிந்தது கொடி. உமாபதிவந்தாற் கொடிஏறும் என்று ஓர் அசரீரி வாக்கு அவர்களுக்குக் கேட்டது. உடனே சென்றார்கள் உமாபதியாரிடம். வந்த உமாபதியார் "ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடம்" என்று தொடங்கிப் பாடினார் கொடிக்கவி. ஏறியது கொடி.

இன்னதன்மையராயிருந்து பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் தீக்கை செய்து முத்திகொடுத்துக் கொடிக்கவியுடன் சிவப்பிரகாசம், உண்மைநெறிவிளக்கம், நெஞ்சுவிடுதூது, வினா

வெண்பா, திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம், போற்றிப் பஃறொடை ஆகிய சித்தாந்த நூல்களும் கோயிற்புராணம், சேக்கிழார் புராணம் முதலிய பிறவுஞ்செய்து, சமாதியிலிருந்து சித்திரை அத்த நன்னாளிற் சிவபிரானுடைய திருவடிகளில் இரண்டறக் கலந்தார்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

சீர்காழியிலே பிராமணகுலத்தவராகிய சிவபாதஇருதயருக்கும் மனைவியார் பகவதியாருக்கும் புத்திரனாகத் திருவவதாரஞ் செய்தார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். மூன்றுட்டைப் பராயத்தரான பொழுதே அவர் சிவஞானப்பாலுண்டு "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

பின்னர், பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கி திரு ஏட்டை ஆற்றிலுந் தீயிலுமிட்டுச் சைவமேன்மையை விளக்கிக் கூன் நிமிர்த்திய தோடு இறந்த வணிகனை உயிர்த்தெழச் செய்தார், போதிமங்கையிற் புத்தரைவாதில் வென்று, ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி, இறந்தபெண்ணின் என்பு சாம்பர்களிலிருந்து அப்பெண்ணைப் பழைய வடிவுடன் உயிர்த்தெழச் செய்து நாடெங்கும் அருட்சிறப்பு விளக்கி யருளினார். அருட்செயல்கள் செய்யும்போழுதும் பிற விடங்களிலும் அவர் பாடியருளிய தேவாரப்பதிகங்கள் இன்று எமக்குக் கவசமா யுதவும் மந்திரங்களாகவும் உண்மை விளக்கும் மறைமொழிகளாகவும் நிலவுகின்றன.

தந்தையார் முதலியோர் விருப்பத்தின்படி வைதிகநெறி விளங்கு மாறும் எம்மனோருக்கு முன்மாதிரியாகவுந் திருமணஞ்செய்ய இசைந்து, திருமணக்கோலத்துடனேயே சிவசோதியுட் புகுந்து சிவசாயுச்சிய முத்தியெய்தினார்.

## திருநாவுக்கரசு நாயனார்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாண் மரபிலே புகழனாருக்கும் மனைவியார் மாதினியாருக்கும் புத்திரனாகத் திருநாவுக் கரசு நாயனார் திருவவதாரஞ் செய்தார். மருணீக்கியார் என்னும் பிள்ளைத்திருநாமத்துடன் யாக்கை நிலையாமை செல்வம் நிலையாமை முதலியவற்றை யுணர்ந்து அறவாழ்வு மேற்கொண்டொழுகும் நாளிலே சமணசமயத்தைச் சார்ந்து அச்சமய நூல்களைக் கற்று அவற்றிற் பாண்டித்தியம் பெற்றுத் தருமசேனன் என்னும் பேருடன் சமணகுரு முதல்வரானார்.

தமக்கையாராகிய திலகவதியார் இவருடைய நிலைமையை நினைத்து வருந்திச் சிவபிரானது சன்னிதியில் முறையிட்டு வந்தார், திருவருள் வழி அவருக்குச் சூலைநோயுண்டாயிற்று. மாற்றமுடியவில்லை. திலக வதியாரின் விருப்பப்படி திருவதிகை வீரட்டானேசுரரை யடைந்து "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடித் துதித்துச் சூலைநோய் நீங்கப்பெற்றார்.

இவற்றை அறிந்த சமணர்கள் அரசனுக்குப் பலபொய் மொழிகளைக் கூறி, அவரைத் தண்டிக்கும் பொருட்டு நீற்றறையுள் இடுவித்தார் கள். நாயனார் "மாசில் வீணையும் மாலை மதியமும்" என்றெடுத்துப் பதிகம்பாடித் திருவடி நீழலில் இன்புற்றிருந்தார். நஞ்சுகலந்து சோறுகொடுக்க அது அவருக்கு அமுதமாயிற்று. கொல்லும்படி பட்டத்து யானையை ஏவினர். "சுண்ணவெண் சந்தனச்சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்............அஞ்சுவதியாதொன்று மில்லை அஞ்சவருவது மில்லை" என்று தொடங்கிப் பதிகம்பாட யானை நாயனாரை வலம்வந்து வணங்கிச்சென்றது. ஒரு கல்லுடன் அவரைக் கட்டிக் கடலிலிட்டார்கள். "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என்று தொடங்கி நமச்சிவாயப்பதிகம் பாடினார். கட்டறுந்து கல்லுத்தெப்பமாய் மிதக்கத் திருப்பாதிரிப்புலியூரை யடைந்தார்.

அதன்பின் திருவடித்தீக்கைபெற்று இறந்தபின்ளையை உயிர்த் தெழுவித்துத் தேவாரம்பாடி வேதாரணியத்தில் திருக்கதவு திறப்பித் தார். இங்ஙனம் பல தலங்களுக்குச்சென்று தேவாரம்பாடி வரும் நாட்களிலே "எண்ணுகேனென்சொல்லி எண்ணுகேனே" என்று தொடங்கித் திருப்புகலூர்ப் பெருமான்மீது திருத்தாண்டகம் பாடிச் சிவானந்த ஞானவடிவாய்ச் சிவ பரம்பொருளின் திருவடிப்பேறு எய்தினர்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதி சைவகுலத் திலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புத்திரனாய்த் திருவவ தாரஞ் செய்தார் சுந்தரமூர்த்திநாயனார். நம்பியாரூரர் என்பது இவரது பிள்ளைத்திருநாமம். இவர் திருக்கைலாசமலையிலே ஆலால சுந்தரர் என்னும் பெயருடன் சிவனடியார்களுள் ஒருவராயிருந்த பொழுது ஒருநாள் அனிந்திதை கமலினி என்னும் பெண்கள் மீது ஆசைவைத்தார். அக்காரணத்தால் மண்ணுலகிலே அவ்வாசையை ஒழிக்குமாறு மக்கட்பிறவி எடுக்கநேர்ந்தது. ஆயினும், தம்மைத்

தடுத்தாட்கொண்டருளும்படி ஆலாலசுந்தரர் வேண்ட எம்பிரான் இசைந்தருளினர்.

உரியகாலத்திலே தந்தையார் செய்த விவாக ஒழுங்கின்படி திருமணக்கோலங்கொண்டு திருக்கல்யாணமண்டபத்தில் அமர்ந்திருந் தார். ஆலாலசுந்தரர். வேண்டியவாறு தடுத்தாட்கொள்ளுவாராய், எம்பிரான் கிழப்பிராமண வடிவந்தாங்கிச் சபைக்குவந்து, நம்பி யாரூரன் நமக்கடிமை என்று அடிமைஓலைகாட்டிச் சாதித்தார். "நீ பித்தனே" என்று கேட்டார் நம்பியாரூரர். விளையாட்டுமொழிகளை விட்டு அடிமைத்தொழில் செய்ய வரவேண்டுமென்று வற்புறுத்தினர் ஐயர். வாது நிகழ்ந்தது; திருவெண்ணெ நல்லூரரரிடம் தீர்ப்புப் பெறுதற்குச் சென்றனர் யாவரும். அங்கே பிராமணர் சபையிலே நம்பியாரூரர் அடிமையென்பது சாதிக்கப்பெற்றது. ஐயரது அகம் எதுவென அறிய விரும்பி அவர்பின்சென்றனர் யாவரும். திருவருட் டுறை என்னுஞ் சிவாலயத்தை அடைந்ததும் அதனுள்ளே சென்று மறைந்தார் ஐயர், பின்தொடர்ந்த சுந்தரமூர்த்தி நாயனர் காணப் பார்வதி சமேதராய் இடபவாகனத்தில் எம்பிரான் எழுந்தருளினர். இன்னருள் புரிந்து "பித்தா" என்றடியெடுத்துப் பாடும்படி பணிக்கப் "பித்தாபிறைசூடீ" என்று தொடங்கிப் பதிகம்பாடி யருளினர் சுந்தரமூர்த்தி நாயனர்.

அதன்பின்னர் நாயனர் பல சிவஸ்தலங்களுக்கும் சென்று பதிகங்கள்பாடிச் சிவபரம்பொருளைத் துதித்தார். இக்காலத்திலே சேரமான்பெருமாணயனருடன் திருவையாற்றுக்குச் சென்றபொழுது காவேரி பெருக்கெடுத்துக் கரையழிந்து வழிமறித்தது. அப்பொழுது "பரவும் பரிசொன்றறியேனன்" என்று தொடங்கித் திருவையா றுடையாரை அழைத்துத் திருப்பதிகம் பாடினர். காவேரி வழி கொடுத்தது. திருவையாறுடையாரைத் தரிசித்து வழிபட்டபின் திருப் புக்கொளியூரில் "எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே" என்றெடுத்துப் பதிகம்பாடி முதலையுண்ட பாலனை யழைத்துக் கொடுத்தார்.

அதன்பின் சேரமான்பெருமாணயனருடைய நகரத்துக்குப் போய், அவருடனிருக்கும் நாட்களிலே சிவபிரானுடைய திருவடிகளை யடைய விரும்பித் திருவஞ்சைக்களத்திலே திருப்பதிகம் பாடித் தொழுதார். சிவபிரான் தேவர்களை நோக்கி நாயனரை வெள்ளானையின்மே லேற்றிக்கொண்டு வரும்படி திருவாய்மலர்ந்தருள, அவ்வாறு தேவர் கள் நாயனரைக் கொண்டுவந்தனர், இதையறிந்த சேரமான்பெருமா

ணுயனுரும் உடன்சென்றனர் சிவபிரானிடம். சிவபிரானது திரு வருளின்படி சுந்தரமூர்த்தி நாயனுர் ஆலாலசுந்தரராகித் திருத்தொண்டு செய்யச் சேரமான்பெருமாணுயனுர் கணநாதராயினர்.

## மாணிக்கவாசக சுவாமிகள்.

பாண்டிநாட்டிலே திருவாதவூரிலே பிராமண குலத்திலே சம்பு பாதாசிரயருக்கும் சிவஞானவதியாருக்கும் புத்திரனுகத் திருவாத வூரடிகள் திருவவதாரஞ் செய்தார். இவர் பதினுறுட்டைப் பராயம் வந்து நிறைவெய்தும் எல்லையில் வேதசிவாகமங்களையும் பிறகலைகள் எல்லாவற்றையும் கற்றுத்தெளிந்தார்.

இவருடைய அறிவொழுக்கச் சிறப்புக்களை யறிந்த பாண்டிய ராசன் இவரைத் தனது முதன்மந்திரியாக்கினுன். அறநெறிவழுவாது இராச்சிய பரிபாலனஞ் செய்துவருங் காலத்தில் அரசனது விருப்பின் படி திருப்பெருந்துறைக்குக் குதிரைவாங்கச் சென்ருர். அங்கே ஞானுசாரியரை யடைந்து ஞானதீக்கை பெற்றுப் பசுகரணங்கள் பதிகரணங்களாக மாறிச் சிவானந்தப்பேறு பெற்ருர். குதிரை வாங்கும் நினைவு மனத்தைவிட்டகன்றது. உடன்சென்றவர்கள் அவாது நிலைமையை அரசனுக்கு அறிவித்தனர்.

அவரைத்தம்மிடம் அழைத்துவரும்படி அரசன் தூதர்களை அனுப்பினுன். அச்செய்தியைப் பரமாசாரியர் அறியும்படி விண்ணப் பஞ் செய்தார் அடிகள், ஆவணிமூலநாளிற் குதிரைகள் வருமெனச் சொல்லி அடிகளுக்கு விடைகொடுத்தருளினுர் பரமாசாரியர். அங் ஙனமே அடிகளும் அரசனுக்குக் கூறினுர். மூலநாளிற் குதிரைகள் வந்தன. கண்டு களிகூர்ந்தான் அரசன். அன்றிரவு குதிரைக ளெல்லாம் நரிகளாய்மாறி நகரிலே பல தீமைகள் விளைத்தன. இது ஓர் சூழ்ச்சியென நினைத்து அடிகளுக்குத் தண்டஞ்செய்ய நினைத்தான் அரசன். ஆயினும் அப்படிச் செய்யாது, அவரை வெய் யிலிலே நிறுத்தித் தனது திரவியத்தைப் பெறும்படி தண்டத் தலைவர்களுக்குப் பணிக்க, அவர்கள் அடிகளை வெய்யிலிலே நிறுத்தி வருத்தினுர்கள். மதுரையை அழிக்குந் தன்மையதாகி அருள் வழி பெருகியது வைகையாறு. அரசன் தன் குற்றத்தைப்பொறுத்து வைகைக்கரையை அடைப்பிக்கும்படி அடிகளை வேண்டினுன். நகரி லுள்ளார் யாவருக்கும் பங்குகள் இடப்பட யாவரும் அடைத்தார்கள். கூலியாளின்மையால் செம்மனச்செல்வி என்னும் வந்திஅம்மையா ருடைய பங்குமாத்திரம் அடைபடாதிருந்தது.

அம்மையார் தமது குறையைச் சோமசுந்தரக்கடவுளுக்கு விண் ணப்பஞ்செய்யச் சோமசுந்தரக்கடவுள் தாமே கூலியாளாகிக் கரையை யடைத்துப் பிரம்படி பெற்று மறைந்தருளினார். உலகிலுள்ள எல்லோர்மீதும் பிரம்படி பட்டது. உற்றதை உணர்ந்த பாண்டியன் தன்னை மன்னிக்கும்படி அடிகளை வேண்டி இராச்சியபாரத்தையும் ஏற்கும்படி இரந்தான். அடிகள் அரசன் கருத்துக்கிசையாது தவ வேடந் தாங்கித் திருப்பெருந்துறை திரு உத்தரகோச மங்கை முதலிய தலங்களுக்குச் சென்று திருவாசகம்பாடி ஈற்றிலே சிதம் பரத்தை யடைந்தார்.

அங்கே புத்தரை வாதில்வென்றார். அவர்கள் சைவத்தைச் சார்ந்தார்கள், அங்கே வதியுங் காலத்தில் திருக்கோவையாரைப் பாடினார். அங்குள்ள அடியார்கள் திருவாசகம் திருக்கோவையார் ஆகியவற்றின் பொருளை விளக்கும்படி வேண்டினர். அவர்களை அவர், பொன்னம்பலத்திற் கழைத்துச்சென்று சபாநாதரைச் சுட்டிக் காட்டி இவரோ அவற்றின் பொருளெனத் தெரித்து மறைந்தருளினார். மறைந்து அத்துவிதமுத்தி எய்தினர். அவருடைய பாடல்கள் விலை மதிப்பில்லா மாணிக்கம்போன்றவை யாகலின் அவருக்கு மாணிக்க வாசகர் என்னுங் காரணத் திருப்பேர் பொருந்தியது.

## திருமூலநாயனார்.

திருக்கைலாயமலையிலே நந்தியம்பெருமானது திருவருளைப் பெற்ற நான்மறையோகிகளுள் ஒருவர் அகத்தியமுனிவரைக் காணும் பொருட்டுப் பொதிய மலையை நோக்கிச் சென்றனர். அவர் அட்டமா சித்திபெற்றவர். செல்லும்வழியில் காவிரிக்கரையில் பசுக்கூட்டங்கள் அழுவதைக் கண்டார். அங்குசென்று பார்த்தபொழுது சாத்தனூரி லுள்ள பசுமேய்ப்பனாகிய மூலன் இறந்து கிடந்தான். பசுக்களின் துன்பத்தை நீக்க நினைத்துத் தமது உடலைவிட்டு மூலனுடைய உடலுட்புகுந்தெழுந்தார். பசுக்கள் இன்புற்று மேய்ந்தன.

மாலைக்காலம் வந்தணைதலும் பசுக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச்சென்றன. பசுக்களுடன் சென்ற திருமூலர் வெளியே நின்றார். அவரைத்தனது கணவனென நினைத்த மூலனது மனைவி அழைத்துச்செல்லுங் கருத்துடன் அவரை அணைந்தாள். அவர் அவளுடைய கருத்திற்கிசையாது ஒரு பொதுமடத்துக்குச் சென்று

அங்கே சிவயோகத்திலமர்ந்தார். இரவுமுழுதும் துயிலாது வருந்திய மூலனது மனைவி அறிஞர் பலருக்கு அச் செய்தியைச் சொன்னாள். அவர்கள் அவரது நிலைமையை யுணர்ந்து அவளுக்கு வேண்டிய வாறு புத்தி புகட்டினர். மேலும் அவள் வருந்துவதைக் கண்டோர் அவ்விடமிருந்து அவளைக்கொண்டு சென்றார்கள்.

திருமூலர் திரும்பிச்சென்றபொழுது தமதுடலைக்காணாது திரு வருட்செயல் இதுவெனத்தெளிந்து திருவாவடுதுறைக்குச் சென்றார். அங்கே இறைவனைவணங்கி மூவாயிரமாண்டு சிவயோகத்தமர்ந்து ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் திருமந்திரத் திருப்பாடல்களைப்பாடி யருளினார். சிவாகமங்களிலுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குபாதப் பொருள்களையும் இவை விளக்குவன. இவற்றைப்பாடியருளிய பின் திருக்கைலாசமலையை யணைந்து சிவ பரம்பொருளின் திருவடிகளை யடைந்தார்.

## திருவள்ளுவ நாயனார்.

தமிழ்நாடு செய்த தவப்பயனே திருவுருவெடுத்த தென்ன, இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரமாண்டுகளுக்கு முன்னே, திரு மயிலையிலே ஆதிக்கும் பகவனுக்கும் அருந்தவப் புதல்வனுயுதித்தார் திருவள்ளுவநாயனார். இவர் வாசுகி அம்மையாரை மணஞ்செய்து "இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்—முயல்வாரு ளெல் லாந் தலை" என்றபடி அருள்வழி நின்று புலன்களை வென்று இறைவன் திருவடிகளை யடைய முயல்வாருளெல்லாம் தாமேதலைவ ராய் இல்வாழ்க்கை வாழ்ந்து, இறை, உயிர், மலம், என்னும் முப்பொருள் உண்மைகளுணர்ந்து, அவற்றின் இயல்புகளை அறம், பொருள், இன்பம், என்னும் முப்பாலில் வீடு தொக்கு நிற்பத் திருக்குறள் என்னும் திருத்திகழ் நூலிற் றந்தருளினார்.

இத்தகைய பெருமை வாய்ந்த நூலைத் தந்தருளியபின், தமது வாழ்க்கைத் துணைவராகிய வாசுகி அம்மையார் இவ்வுலக வாழ்வை ஒருவ, தாமே தனித்துப் பல அறன்களைப் புரிந்து ஒளிபெற வாழ்ந்து இறைவன் திருவடிகளை எய்தினர்.

## இறை, உயிர். மலங்களும் இறைவன் அருட்டொழில் ஐந்தும்.

சமய ஆசாரியர் சந்தானசாரியர் முதலிய ஆசாரியர்களின் சரித்திரங்களை அறிந்தோம், இவர்கள் தந்தருளிய நூல்களே சைவ

சமய நூல்கள் என்னும் தலைஅங்கத்தின் கீழ்க்காணக் கிடப்பவை யாகும். அவையும் ஏனைய வழிநூல் சார்புநூல்களும் இறை, உயிர், மலம், அல்லது பதி, பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் தன்மை களையே விளக்குவனவாகும். இம் முப்பொருள்களும் அனுதி. இவற்றுள் ஆன்மா தடைப்பட்ட அறிவையுடையது. அத்தடைக்கு ஏதுவாயிருப்பது மலம், அது அனுதியாய் ஆன்மாவைப் பந்தித்து நிற்பது. அம்மலம் நீங்கி அறிவுவிளங்கி ஆன்மா இறவாஇன்பம் பெறும் பொருட்டே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து அருட்டொழில்களையும் பதிப்பொருள் செய்யும். அறிவு விளங்குதல் என்பது ஞானம் பெறுதலாகும். ஞானம் என்பது பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என முத் திறத்தது என்பது உள்ளத்திற் சிறப்பாகப் பதிக்கவேண்டியது ஒன்று.

"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையில் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம், அந்தம் ஆதி என்மனுர் புலவர்" என்னும் சிவஞானபோதச் சூத்திரம் முப்பொருள், ஐந்தொழில் ஆகிய எல்லாவற்றின் தொடர்புகளையும் தொகுத்துக்காட்டி விளங்கு கின்றது, இவற்றை,

**"ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்**
**வருமுறை வந்து நின்று போவது மாதலாலே**
**தருபவ னொருவன் வேண்டுந் தான்முத லீறுமாகி**
**மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே."**

என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுள் விரித்துக் கூறுகின்றது.

## பதி (பதியுண்மையும் பதியிலக்கணமும்)

அவன், அவள், அது, என்று சுட்டியறியப்படுகின்ற பொருள்கள், தோன்றும் முறையிலே தோன்றி நின்று அழிதலால் அவ்வாறு தோற்றி நிறுத்தி ஒடுக்கும் ஒருவன் வேண்டும். அங்ஙனம் செய்ப வனே பதி எனப்பெறும். அப் பதிப்பொருள், தானே தனி முத லாகி, ஈறுமாகி, இயல்பாகவே பாசத்தினீங்கிய ஞானசத்திவடிவைப் பொருந்தி நின்று இத்தொழில்களைச் செய்யும், என மேலேகாட்டிய செய்யுள் தருவதிலிருந்து பதியுண்மை பதியிலக்கணங்கள் ஒருவாறு அறியப்பெற்றன.

## பசு (ஆன்மா)

இவ்வாறு அறிபவர் நாங்களே. நாங்கள் ஆன்மாக்கள் எனப் பெறுகின்றோம். சிற்றறிவு சிறுதொழில்களுடைய எம் நிலைமையை அணுக்கள் என்னும் சொல் குறிக்கும்.

ஆன்மாக்கள் அளவிடற்கரியனவாய், என்றும் உள்ளன வாய் ஆணவம் என்னும் இருளில் அமிழ்ந்தி, தாம்தாம் செய்யும் இருவினைக்கேற்ற உடல்களை இறைவன் திருவருளாற்பெற்று, அவற்றைக்கொண்டு இருவினைப்பயனாகிய போகங்களை அருந்தும் பொழுது மீட்டும் மீட்டும் வினைகளையீட்டி, சுவர்க்க மத்திய, பாதல உலகங்களிற் சென்றுழலும். அவ்வாறுழலும் பொழுது மலபரிபாக முண்டாகிக் குருவருளால் அறிவொளி விளங்கி, இருள்மலம் நீங்கிப் பதிப்பொருளின் திருவடிகளை யடைந்து பேரின்பப் பெருவாழ் வெய்தும், இவ்வுண்மையை,

**"எண்ணரிதாய் நித்தமா யிருண் மலத்தி லழுந்தி யிருவினையின்**
**றன்மைகளுக் கீடான யாக்கை**
**அண்ணலரு ளானண்ணி யவையவரா யதனு லலகினிகழ்**
**போகங்க ளருந்து மாற்றுற்**
**புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப் புணருமிருண்**
**மலபாகம் பொருந்தியக்கா லருளால்**
**உண்ணிலவு மொளியதனு லிருளகற்றிப் பாத முற்றிடுநற்**
**பசுவர்க்க மென வுரைப்ப ருணர்ந்தே."**

என்னும் சிவப்பிரகாசச் செய்யுள் அறியத் தருகின்றது.

## பாசம் (மலம்).

ஆன்மாவை அனுதியே அத்துவிதமாய் நின்று பந்தித்து அறிவைத் தடைப்படுத்தி நிற்பதாய், ஒளிவடிவாயும் ஆன்மாவுக்கு அந்தரான்மா வாயும் நிற்கின்ற சிவமும் உடன்நிற்ப, அச்சிவத்தைச் சாராது ஆன்மாவைச் சார்ந்து ஆன்மாவுடன் இன்றளவும் ஆணவமானது நின்றது என்னும் பொருளதாகிய

**"அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி**
**யின்றளவு நின்ற திருள்."**

(திருவருட்பயன்) குறட்பா மலத்தின் தன்மையை அறியத் தருகின்றது.

## மாயை கன்மங்களும் அவற்றின் விளைவும்.

இவ்வாறு ஆன்மஅறிவைத் தடைப்படுத்தித் துன்பத்துக்கேது வாய் நிற்கின்ற ஆணவமலம் நீங்கும்வழி யாது? துன்பத்தைத் தொலைத்து இன்பம்பெறுவதெங்ஙனம்? என்று ஆராயும்பொழுது, ஆன்மாக்கள் புரிகின்ற புண்ணிய பாவங்களுக் கேற்றவாறு, மாயா காரியங்களாகிய, உலகங்கள், உடல்கள், உடல்களின் உறுப்புக்கள், இருவினைகள், இருவினைப்பயன்களாகிய இன்பதுன்பங்கள், ஆகிய வற்றால் அறிவுவளர்ந்து ஆணவம் நீங்கி இன்பம் உண்டாகின்ற தென்று அறியவருகின்றது. இது எப்படியெனில், இருளிலிருக்கின்ற ஒருவனுக்கு ஒரு விளக்கின் ஒளி சூரியன் உதிக்கும்வரையும் எப்படி உதவுகின்றதோ அப்படியே இம் மாயாகாரியங்கள் தரும்பயன் சிவஞானம்பெற்றுப் பரமுத்தியடையும் வரையும் உதவுகின்றது.

**"விடிவாமளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து."**

(திருவருட்பயன்.)

என்னும் குறட்பாவால் இது அறிய வருகின்றது.

இருளில் இருத்தல் ஆணவத்தோடு அத்துவிதமாயிருத்தலாகும்.

## இருவினைகளும் இன்பதுன்பங்களும்.

தாம்தாம் புரிகின்ற புண்ணியபாவங்களுக் கேற்றவாறு உடல்கள் முதலியவற்றைப் பெற்று உயிர்கள் மண்ணுலகம், சுவர்க்க நரகம் ஆகியவற்றுக்குப் போக்குவரவு செய்து இன்பதுன்பங்களை அநுபவிக் கின்றன என்றும் இவ்வாறு அநுபவிப்பது சிவஞானம் பெறுதல் பரமுத்தியடைதல் ஆகியவற்றிற்கு வேண்டிய ஆரம்ப சாதனமாயமை கின்றதென்றும் அறிந்தோம். இவை எவ்வாறு ஆரம்ப சாதனமாயமை கின்றன என்று அறிதல் ஈண்டுப் பொருத்தமுடைத்து.

ஒரு உலக நிகழ்ச்சியை உற்றுநோக்குவோம். தாய்தந்தையர் தங்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி இன்புறச்செய்ய முயல்கின்றார்க ளல்லவா? தங்கள் சொல்லின் வழிநின்று ஒழுகும் பிள்ளைகள் இன்புறுமாறு தம்மால் இயன்ற அளவுக்கு வேண்டியன எல்லாம் செய்வர், தங்கள் சொல்லின்வழி நில்லாப்பிள்ளைகளைத் துன்புறுத் தியே யெனினும் நல்வழிப்படுத்த முயலுவர். மற்றொன்றைப் பார்ப்போம். ஒரு வைத்தியன் ஒருநோயை மாற்றுதற்கு இனிய

மருந்தைக் கொடுப்பதுமுண்டு கசப்பு மருந்தைக் கொடுப்பதுமுண்டு. இங்ஙனமே இறைவனும் ஆன்மாக்கள் செய்யும் வினைகளுக்கேற்ப இன்பதுன்பங்களைக் கொடுத்து மலப்பிணியை நீக்குவன்.

"இருவினை யின்பத்துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போவதாகு மன்னிய வினைப்பயன்கள்
தருமரன் றரணியோடு தராபதி போலத்தாமே
மருவிடாவடிவுங் கன்மப் பலன்களு மறுமைக்கண்ணே."

"தந்தைதாய் பெற்றதத்தம் புதல்வர்கடஞ் சொல்லாற்றின்
வந்திடாவிடினு றுக்கி வளாரினலடித்துத் தீய
பந்தமுமிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்
இந்தநீர் முறைமையன்றோ வீசனார்முனிவு மென்றும்."

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தங்கள் இப்பொருள்களைத் தருதல் காண்க.

## இறையருள் இன்றியமையாதது.

எனவே இவைஎல்லாம் இறைவன் திருவருளாலேயே நிகழ்கின்றன என்பது நன்கு அறியவந்தது. இவ்வுண்மையை மேலும் விளக்கி வலியுறச்செய்கின்ற ஒருசில அருண்மொழிகளை ஈண்டுக் காண்போம்.

"கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவ
னற்றாடொழாஅ ரெனின்."

"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பையில."

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்றலரிது."

(திருக்குறள்)

என்பனவற்றால் கடவுளை வழிபடாராயின் மக்கள் தாம்கற்ற கல்வியாற் பெறும்பயன் ஒன்றுமில்லை யென்றும் கடவுளை யடைந்தோருக்கு எவ்விடத்தும் துன்பம் உண்டாகமாட்டாதென்றும் கடவுளை யடைந்தோருக்கேயன்றி மற்றவர்களுக்குத் துன்பம் நீக்கமுடியாதென்றும் தெளிவாக அறிவுறுத்தப்பெறுகின்றது.

"நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங்கரன்."

(திருவருட்பயன்)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னொடொறு நல்குவானலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே.

உய்யுமா றிதுகேண்மி னுலகத்தீர்
பைகொள் பாம்பரையான் படையார்மழுக்
கையினா னுறைகின்ற கருவிலிக்
கொய்கொள் பூம்பொழிற் கொட்டிடை சேர்மினே.

(திருநாவுக்கரசு சுவாமிகள்)

என்னும் அருட்பாக்களும் இப்பொருளை வலியுறுத்துகின்றன. எனவே ஆன்மாக்களாகிய நாங்கள் எங்கள் துன்பங்களை நீக்கி இன்பம் பெறுதற்கு இறைவன் திருவருளே இன்றியமையாதது என்று கண்டோம்.

## இறைவன் திருவருளைப் பெறும்வழி.

எங்கள் வாழ்க்கையில் வரும் துன்பங்களை நீக்கி நிலையான இன்பம்பெறுதற்கு இறைவன் திருவருளைப் பெறுதல் இன்றியமையாதது என்று கண்டநாம் இறைவன் திருவருளை யெய்தும் வழியை ஈண்டுக் காண்போம்.

"ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம்தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொ டர்ச்சித்தல்ஆதி
இழுக்கிலா அறங்களானல் இரங்குவான் பணியறங்கள்"

என்னும் சிவஞானசித்திச் செய்யுளில் ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், தவம், தானம், வந்தித்தல், வணங்கல், வாய்மை ஆதியன திருவருளைப் பெறும்வழிகளாகக் கூறப்பெற்றிருக்கின்றன. இவை சாமானிய மக்கள் முதல் சரியை

கிரியை, யோகபாதங்களில் நிற்போர் யாவருக்கும் ஒருங்குகூறப் பெற்றிருக்கின்றன,

இவற்றுள், சாமானியமக்களுக்கு ஒழுக்க முதற்படிகளாய் வேண்டப்படுவன அன்பு, வாய்மை, கொடை, மதுபானஞ்செய்யாமை பிறன்மனைவிழையாமை யாகியவைகளாகும். இவை, கொலை, பொய், களவு, கள், காமம், எனப்படும் பஞ்சமாபாதகங்களை நீக்கும் வழிகளாகி ஒழுக்கநெறிகளுமாதல் குறிப்பிடத்தக்கது,

## பஞ்சமா பாதகங்கள்.

ஏனைய பாதகங்க ளெல்லாவற்றுக்கும் ஏதுக்களாகித் தாமே பெருந்துன்பம் விளைத்தலின் கொலை, பொய், களவு, கள், காமம் என்னும் ஐந்தும் மாபாதகங்கள் எனப் பிரித்துக் கூறப்பட்டு வருகின்றன. இவை ஐந்துமே பஞ்சமா பாதகங்கள் என்று சைவநூல்களில் தெளிவாகக் காணக்கிடக்கவும் இவற்றைச் சிலர் வேறுபடுத்திக் கூறிவருகின்றனர்.

**"கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய**
**வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்**
**இல்லா னியமத் திடையின் நின்றானே."**

**கொலையே களவுகட்காமம் பொய்கூறல்**
**மலைவான பாதக மாம்அவை நீக்கித்**
**தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ்சார்ந்தோர்க்**
**கிலையாம் இவைஞான னந்தத் திருத்தலே.**

(திருமந்திரம்)

**1. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று.**

**2. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்**
**பிறவினை யெல்லாந் தரும்.**

**1. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**றன்னெஞ்சே தன்னைச் சுடும்,**

**2. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

1 களவின்கட் கன்றியகாதல் விளைவின்கண்
வீயா விழுமந்தரும்.

2 அருள்கருதி அன்புடையராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார் கணில்.

1 உட்கப் படாஅரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகுவார்.

2 துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.

1. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கணில்

2. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான்கண் (திருக்குறள்)

என்பவற்றுடன் திருத்தொண்டர் புராண வசன முகவுரையிலே "சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறன்மனைவிழைதல், வரைவின்மகளிர்விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய் இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய்.........உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்" என்று நாவலர் பெருமான் கூறியிருத்தல் இங்கே உற்றுநோக்கத்தக்கது. இவற்றுள்ளே புலாலுண்ணல் கொலையுள்அடங்க, பிறன்மனைவிழைதல் வரைவின்மகளிர்விழைதல், காமத்துள்அடங்க, கொலை, பொய், களவு, கள், காமம் ஆகியவற்றையே நாவலர் பெருமானும் எடுத்துக்காட்டினார் என்பது எளிதிலுணரக்கிடக்கின்றது.

இவற்றால், கொலை, பொய், களவு, கள், காமம் என்னும் ஐந்துமே பஞ்சமாபாதகங்களெனப்படுதல் எவ்விதசந்தேகத்துக்குமிடமின்றித் தெள்ளிதிற் புலப்படுதல் காண்க. பௌத்த, கிறிஸ்த மதங்களும் இவற்றையேகூறியிருத்தல் இக்கூற்றை வலியுறுத்துகின்றது.

## மாபாதகங்களைப்பற்றிய சிலசந்தேக நிவிர்த்தி.

ஆன்மாக்களின் துன்பத்துக் கேதுவாயிருப்பது அஞ்ஞானம். எனவே அஞ்ஞானத்தைவிளைக்கும் எதுவும் துன்பத்துக்கேதுவாகும். பாதகங்களைப்பற்றிய சந்தேகநிவிர்த்திக்கு இவ்வுண்மைபெரிதும்உதவும்.

## (1) கொலை.

உயிர்க்கொலை பாவமென்று பெரும்பான்மையோர் இலகுவாக ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால், பலதிறப்பட்ட கொலைகளைச்செய்யும் பொழுதும் கொலைகளுக்கு ஏதுவாயிருக்கும்பொழுதும் இவ்வறிவு இப்பாதகத்தைத் தவிர்க்க உதவுவதில்லை. உதாரணமாக, மற்ச மாமிச உணவு உட்கொள்ளுதலை ஆராய்வோம். இவ்வுணவு உயிர்க் கொலைசெய்தே பெறப்படும். இதைஉண்பவர், மற்றவரே கொலை செய்கின்றார் தாமல்லஎன்பர். ஒரு பொருளைக் கத்தியால்வெட்டினால் கத்தியே வெட்டியது நாமல்ல என்பதை ஒக்குமல்லவா இது? கண் ணப்ப நாயனார் சரித்திரத்திலுள்ள கருப்பொருளை விளங்காதோர் அவர் சரிதையைத் தங்களுக்கு உதவியாக எடுத்துக் காட்டுவது முண்டு. "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை யருளாட்சி—யாங்கில்லை யூன்தின்பவர்க்கு" என்னும் பொய்யாமொழி எவ்வித சந்தேகத்தையும் நீக்குதல்காண்க.

## (2) பொய்.

பொய் என்பது உண்மையைத்திரித்தல். இதுதமக்கும் பிறர்க்கும் மயக்கத்துக்கேதுவாகின்றது. இக்காலச் சட்ட அறிஞருட்பலர் உண் மையைத்திரித்தலிலேயே பேரும் பொருளும் படைத்தவராகின்றனர், இவ்வாறு செய்தல் தங்கள்கடமையென்று சொல்லுகின்றனர். நீதியை நிலைநாட்டுவதே சட்டஅறிஞர் கடனன்றி உண்மையைப் பொய்யாக் குவதும் பொய்யை உண்மையாக்குவதுமல்ல. இவ்வாறே பலதுறை களிற்பலர் உண்மையைத்திரித்துத் தங்கள்வாணுட்களை வீணுட்க ளாக்குகின்றனர்.

மற்றவர்களைப் பாதிப்பதைமாத்திரம் திரித்துச்சொல்லக்கூடாது, தம்மைப்பற்றி மறைத்துத் திரித்துச் சொல்லுதல் அத்தகையதன்று, அதுஒருவரையும் பாதிக்கமாட்டாது எனக்கொள்ளுவர் ஒருசிலர். தம்மைப்பற்றியதேயெனினும் அதுதிரித்தலேயாகும். அத்திரித்தல் அன்னவருடைய அறிவைப்பாதிக்கும். அதனால் தமதுசொந்த வாழ்க் கையின் உண்மைத்தன்மை உணரமுடியாத நிலைமை ஏற்படுகின்றது.

## (3) களவு.

களவெனப்படுவது பிறர்பொருளைக் கவர்தல். கைலஞ்சம்பெறுதல் முதலிய எல்லாம் களவேயாம். அரசாங்க அதிகாரிகளுக்குக் காசையும் மற்றும் பொருள்களையும் கொடுத்தும் அரசியல்வாதிகளுக்கு வாக்குச் சீட்டுமுதலியவற்றை முறைதவறி உதவியும், தாம் நீதிப்படிநேர் வழியாற்பெறமுடியாத ஒன்றைப்பெறுதல், நீதிப்படி பெறவேண்டியவராயிருக்கும் ஒருவருடைய பொருளைக்கவர்தலேயாகும் "தீவினைவிட்டீட்டல் பொருள்" என்பது இதைநன்கு விளக்குகின்றது.

## (4) கள்.

மதுபானம் மதிமயக்குவது என்பது வெளிப்படை. மதிமயக்கம் என்பது அஞ்ஞானம். அஞ்ஞானம் துன்பத்துக்கு ஏதுவாகும். தமக்கோ பிறர்க்கோ துன்பத்துக்கேதுவாவது பாவமே.

## (5) காமம்.

மற்றவர்களுக்கு மனவருத்தத்தை விளைப்பது பாவம்தான். ஆனால் காமுகர் இருவர் ஒருப்பட்டு ஒழுகுதல் பாவமாகாது என்பர் ஒருசிலர். புலன்வழிமனம்சென்று காமுகராய்வாழ்வோரும் சிவபெருமானுக்கும் சிவனடியாருக்கும் மெய்யன்பரானல் இறைவன்திருவருளைப் பெற்று உய்திபடைவர், சுந்தரமூர்த்திநாயனர் சரித்திரம் இதற்குச்சான்ருகும் என்று செப்புவர் மற்ருெருசிலர்.

இருவரும்ஒருப்பட்டாலும் அவ்வொருப்படுதல் அஞ்ஞானத்தாலேயே உளதாகி மேலும் அஞ்ஞானத்துக்கு ஏதுவுமாகின்றது. அஞ்ஞானம் பாவத்துக்கேதுவே.

உண்மை நூற்கருத்தைபுணரும் பேறின்மையோடு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சரித்திரஉட்பொருளைக் காணுமாறில்லாதோரே சுவாமிகளது சரித்திரத்தை மேலேகாட்டியவாறு எடுத்துக்காட்டாக எடுத்தாளுவர். "பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க—நெறிநின்ருர் நீடுவாழ்வார்" என்னும் பொன்மொழிகளை இவர்கள்கண்டிலர், கண்டாராயின் உண்மைகாணுதவராயினர்.

"மனங்கவர்ந்தார்க்கில்லை வருந்துறவுமாயாச்
சினங்கவர்ந்தார்க்கில்லைத் தெளிவே—யனங்கனம்பிற்
புண்ணுற்றார்க்கில்லைப் புனிதம்பொருந்துமரன்
கண்ணுற்றார்க்கில்லை மதன்காண்" (சித்தாந்தசிகாமணி)

என்பதோடு

" ஆதிமூர்த்திபவன்றிறம் நோக்கியே
மாதர்மேன் மனம்வைத்தனை தென்புவி
மீது தோன்றியம் மெல்லியலாருடன்
காதலின்பங்கலந்தணைவாயென

கைகள் அஞ்சலிகூப்பிக்கலங்கினன்
செய்ய சேவடிநீங்கும் சிறுமையேன்
மையன் மானிடமாய்மயங்கும்வழி
ஐயனே தடுத்தாண்டருள்செய்யென"

என்னும் திருத்தொண்டர் புராணச்செய்யுள்கள் இங்கேஉற்று நோக்கவேண்டியன, சுந்தரமூர்திநாயனர் ஆலாலசுந்தரராயிருந்த காலத்தில் மாதர்மேல் மனம்வைத்தமையால் மயக்கத்தைத்தரும் மானிடயாக்கையைப்பெற நேர்ந்ததென்பதும் அதைநினைத்துக்கலங்கித் தம்மைத்தடுத்தாட்கொள்ளுமாறு வேண்டினர் என்பதும், வேண்டியவாறு பின்னர்தடுத்தாட்கொள்ளப்பெற்றார் என்பதும் நாயனரது சரித்திரஉட்பொருள்களால் நன்குதெரியவருகின்றன. ஐம்புலவேடர் தொடர்புநீங்கி அரசனையடைந்தார். பாசபசுஞானங்கள் நீங்கிப்பதிஞானம்பெற்றார்: சிவஞானச்செல்வராயினர். பசுகரணங்கள் பதிகரணங்களாய் மாறிவிட்டன. ஐம்புலவேடர் தொடர்புநீங்கியது. இவற்றை உள்ளவாறுணரமாட்டாதார் வல்லார்வாய்க்கேட்டறிக.

## சைவசமய சாரம்.

மக்கட்பிறவியெடுத்தநாம் எம்மையும் எம்துநிலைமையையும் ஏனையஉயிர்களின் நிலைமையையும் இம்மண்ணுலகத்தையும் இம்மண்ணுலகப்பொருள்களையும் ஏனையஉலகங்களையும் எமக்குவாய்த்தஅளவில் உற்றுநோக்கும்பொழுது எல்லாம் நூதனமாகவேதோன்றும். நாம் எப்படிவந்தோம் எப்படிப்போவோம் என்பதுதெரியாது. எல்லாம்

தோன்றி, நின்று, அழியுந்தன்மையவாயிருக்கின்றன. தோற்றுவித்தல் முதலியன எம்மால் ஆவனவல்ல. எம்மைப்பற்றியே நாம் நுணுகி ஆராயும்பொழுது நாம்தேகமல்ல, மனமல்ல, பிராணவாயுநானுமல்ல என்றுகாண்கிறோம். இவ்வாறுகாணும்பொழுது, எங்கள் வீடு மேசை கதிரை முதலியவற்றிற்கு நாம்எவ்வாறு கருத்தாக்களாயிருக்கிறோமோ அவ்வாறுஇவ்வுலகங்கள், உலகப்பொருள்கள் ஆகிய எல்லாவற்றிற்கும், நாமல்லாத வேறுபேரறிவுடைய பரம்பொருள் ஒன்றுஇருத்தல்வேண்டு மென்றுகருதுகிறோம். அதைக்கடவுள் என்போம். அதுஎத்தன்மைய தென்று அறிந்து கூறஎழக்குமுடியவில்லை. எமதுசொரூபமே இத்தன்மை யதென்றறியாது இடர்ப்படும்நாம் எமக்குமேலாகியவேறு பொருளைப் பற்றியறியமுடியாமலிருப்பது நூதனமல்லவே.

ஆனால். தகுதிவாய்ந்த அனுபவம் வாய்க்கப்பெறும் பொழுது இதுநாமல்ல இதுநாமல்ல என்று ஆராச்சிசெய்கின்ற நாம், எமதுசொரு பம் அறிவுமயமானது என்றுஅறிகிறோம். எம்மிலுங்கூடியபேரறிவுடைய பெரும்பரம்பொருளைப் பற்றியுமறிகிறோம். எங்கள்தேகம் முதலியவற் றைக் கருவிகளாகக்கொண்டே இவ்வாறுஅறிகிறோம். இவைமாயைஎன் னும் ஒருபொருளிலிருந்துண்டானவைஎன்றும் அறிகின்றோம். முன்னொரு ஞான்று இவ்வாறுஅறியமுடியாமலிருந்தோமல்லவா? இவ்வாறு அறிய முடியாமலிருந்ததற்குக்காரணமாயது ஒன்றுண்டு. அதுஆணவம்எனப் படும். எங்கள்தேகம் முதலியவற்றைக்கொண்டுநாம்செய்யும் செயல்கள் வினைஅல்லது கர்மம் எனப்படும். கர்மம், மனம் வாக்குக் காயங்களாற் செய்யப்படுவது. ஆகவே, பதி(இறை) பசு(உயிர்) பாசம்(மலம்) என்னும்முப்பொருளுண்மை இப்பொழுது அறியப்பெற்றோம்.

எங்கள் பாலப்பருவத்தில் நாம் இப்படியறியவில்லை. சிலர் எப்பரு வத்திலுமே இப்படியறிவதில்லை. எனவே, எம்மைப்பற்றிநாம் அறியத் தந்து, துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெறும்வழியைக் காட்டி, வேண்டிய வேண்டியவாறு இன்பமீந்து, பேரின்பமென்னும் நிலை யான இன்பம்பெறும் வழியையுங்காட்டிக் கருணைகூர்ந்தருளுகின்ற இறைப்பொருளின்திருவடிகளை எமக்காகவேநாம் என்றும்மறவாது வழி படுதல் மானிடயாக்கையைப்பெற்ற இந்த அவதாரத்தில் எங்கள்மீதுள்ள பெருங்கடனயமைகின்றது.

இறைப்பொருளானது **சைவ சமயிகளுக்குமாத்திரமல்ல** மட்கட்பிறவியினருக்கு மாத்திரமல்ல, எல்லாஉயிர்களுக்குமே அம்மையப்பராய்—தாய்தந்தையராய்—விளங்

குகின்றது. தாய்தந்தயராவோர், தங்கள்பிள்ளைகள் ஒருவருக்கொருவர்துன்பஞ்செய்யாது இன்பஞ்செய்து அன்புபூண்டு இன்புற்றிருக்கக்கண்டவிடத்தில், மிகுந்தஇன்பம் பெறுதலை இவ்வுலகின்கண் கண்கூடாகக்காண்கிறேமல்லவா? இதுபோலவே மட்கட்பிறவிஎடுத்தநாம், மக்களாகியஎங்களுள் ஒருவருக்கொருவர் துன்பஞ்செய்யாது இன்பஞ்செய்து, மக்களுக்குப்போலவே ஏனையஆன்மாக்களுக்கும் இனியவைசெய்து இன்புறுவோமாயின் சிவபரம்பொருளின் அருட்பெருங்கருணைக்காளாவோமென்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதில்விளங்கும். இஃதேபேரின்பப்பெருவாழ்வுக்கு வழியாதல்காண்க.

> **"அன்புசிவம் இரண்டென்பர் அறிவிலார்**
> **அன்பேசிவமாவதாரும் அறிகிலார்**
> **அன்பேசிவமாவதாரும் அறிந்தபின்**
> **அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே"** (திருமந்திரம்)

என்பதுஇவ்வுண்மையை விளக்குகின்றது.

இவ்வாறு அன்புபூண்டு இன்பஞ்செய்தற்கு இன்றியமையாச் சாதனமாயுள்ளது, பொய்மைநீக்கி வாய்மைமேற்கொள்ளுதல்—சத்தியநெறிநிற்றல்—உயர்வுள்ளும் உள்ளமுடையார் ஒவ்வொருவரும் மேற் கொள்ளவேண்டியது இவ்வுயரியஒழுக்கம். மனத்தாலோ, வாக்காலோ, காயத்தாலோ, எவ்விததீமையையும்செய்ய இடங்கொடாது ஒருவரை உறுதியாய்க்காக்கும்தன்மைபது இது. சத்தியநெறிநிற்கும் ஒருவர் கொலைசெய்வாரேயானல், கொலைசெய்தேன் என்றுசொல்லிக் கொலைத்தண்டனைக்காளாவார். கொலைத்தண்டனையை எவரும்விரும்புவதில்லை. எனவே சத்தியநெறிநிற்பவர் கொலைசெய்யாரென்பது தானே பெறப்படும். இதுபோலவே, பிறர்பொருளைக்கவர்ந்தவர், கவர்ந்ததண்டனைக்காளாவதுடன் கள்வனென்று கருதவும்படுவர். ஆகையாற்பிறர்பொருளைக்கவரார். மதுபானம்மதிகேடர்செயல்என்னும்இகழ்மொழிக்காளாக்கும். ஆகையால் அறிவுடையார் மதுபானஞ்செய்யார். பகை, பாவம், அச்சம், பழி என்பவற்றுக்கேதுவாகி வாழ்க்கைப்பண்புடையரால் எள்ளவும்படுவராகலின் காமநெறியைக் கருதார் கண்ணியமான வாழ்க்கைவாழவிரும்புவோர். எனவே சத்தியநெறி நிற்போர் மேன்மையுடையராய்விளங்கி அன்புபூண்டு இன்பம்பெறுவர் என்க.

> **"எல்லாவிளக்கும்விளக்கல்ல சான்றோர்க்கு**
> **பொய்யாவிளக்கே விளக்கு"** என்றுதெய்வத்திருமறை

திருந்தக்கூறியது இதனுலேயாம்.

"செய்யர் வெண்ணூலர் கருமான்மறிதுள்ளும்
கையர் கனைகழல்கட்டியகாலினர்
மெய்யர் மெய்நின்றவர்க்கல் லாதவர்க்கென்றும்
பொய்யர் புகலூரர்ப்புரிசடையாரே"

என்று அப்பர்சுவாமிகள் அருளியதும் இதனாலேயாம்.

பரந்தநூல்தரும் பொருள்களின்பயன்தந்து, உயர்ந்தநெறியுதவி, இவ்வுலகவாழ்க்கையில் இன்பம்பயப்பனவாகிய பொருள்கள் இரண்டுள. மேலேகூறியவற்றால் அவைஒருவாறுஉய்த்துணரக்கிடக்கின்றன. அவை அன்பு (அகிம்சை) சத்தியம் ஆகியஇரண்டுமாம். பாரதனிற் பரதகண்டத்தை விளங்கச்செய்து பாரிலுள்ளயாவருக்கும் ஒளிகாலும் பரிதியென்ன வாழ்ந்த காந்தியடிகளும் இவற்றையே எடுத்தியம்பினர்.

"அன்பேகடவுள் அன்பேயுலகம்
அன்பேஉயிர்கள் அன்பேஅனைத்தும்
அன்பேஆவதும் அழிவதும்போலாம்
அன்பின்அதிசயம் ஆரறிவாரே.

அனைத்துயிரும் நீயேதம்பி
அதையறிந்து வாழ்ந்திடடா
தினைத்துணையும் மறந்திடாமல்
திருநாமத்தைச் செபித்திடடா" என்று அஞ்ஞான

இருள்படர்ந்த எம்மத்தியில் மெய்ஞ்ஞானக் கதிர்பரப்பி விளங்கும்சிவதொண்டனும் தமது நற்சிந்தனையில் நவிலுதல் காண்க.

இது உலகவாழ்க்கை நெறியில் நிற்போர் இகத்திலும் பின் பரத்திலும் இன்பம்பெறுதற்குச் சைவசமயம் காட்டுகின்ற உயர்ந்த நெறியாகும்.

## இலங்கையின் சமயங்கள்தரும் இன்பவாழ்க்கைநெறி.

உலகின்கண் அறிஞர்கள் பெரும்பான்மையோர் அனுட்டிக்கும் இஸ்லாம், கிறிஸ்துவம், பௌத்தம், சைவம் ஆகியசமயங்களின் நூல்கள் உயிர்வாழ்கையைப்பற்றிக் கூறும்உண்மைப்பொருள்களை முன்னர்க்கண்டோம். அவற்றை உற்றுநோக்கும் பொழுது பௌத்தமொழிந்த ஏனையமூன்றுசமய நூல்களும் கடவுள் ஒருவர்உளர் என்று கூறுகின்றன. அவர் எங்குமுள்ளவர், எல்லாமறிபவர் எல்லாம் வல்லவர். உயிர்களாகிய எங்களுக்காகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய அருட்டொழில்கள் ஐந்தையும் செய்கின்றார்.எமக்குஇன்பந்தருதலே இவற்றின் நோக்கம்,என்றறிகிறோம்.

நல்வினை தீவினைகளைநாம்செய்து அவற்றின்பயனாகிய இன்பதுன்பங்களையும் சுவர்க்க நரகங்களையும் எய்துகின்றோம் என்றும் அவைஅறியத்தருகின்றன. காணும்அறிவாற்றலுடையார் இவற்றைஇவ்வாறு ஐயந்திரிபின்றிக்காண்பர்.

பௌத்தநூலானது இவற்றைஇவ்வாறு காட்டாவிடினும் நல்வினை தீவினைகளையும் அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்கள் சுவர்க்கமத்திய பாதலங்களில் மறுபிறப்பு ஆகியவற்றையும் தெளிவாக அறியத்தருகின்றது. அவற்றை நுணுகி ஆராயும்பொழுது ஆன்மஉண்மை கடவுளுண்மை ஆகியவை நன்குபெறப்படுகின்றன.

இவை இத்தன்மையவாயிருத்தலின், கடவுள் ஒருவரேஉளர், அவர்எங்குமுள்ளவர், எல்லாம் அறிபவர், எல்லாம்வல்லவர், அவராலேயே எல்லாம் ஆக்கி, நிறுத்தி, அழிக்கப்பெறுகின்றன என்பவை எல்லோராலும் ஒப்புக்கொள்ளவேண்டியவையாகின்றன. கிறிஸ்தவர்களைமாத்திரமல்ல, இஸ்லாமியரைமாத்திரமல்ல, சைவர்களைமாத்திரமல்ல நாஸ்திகக்கொள்கையுடைய மற்றவர்களோடு ஏனையஉயிர்கள் எல்லாவற்றையும் இந்தஒரேகடவுளே படைத்துக் காத்துவருகின்றார் என்பதை நல்லுணர்வுடையார் எவரும் ஒப்புக்கொள்ளுவர். இவற்றை ஒப்புக்கொள்வோர், இந்தச்சமயம் மெய் அந்தச்சமயம் பொய் என்று சொல்லார்; பிள்ளைகளாகிய எமக்கு வேண்டிய வேண்டியவற்றைப் பிதாவாகிய கடவுள் வேண்டியவேண்டியவாறு தருகின்றார் என்றுவிளங்குவர்; இதுமெய் அதுபொய் என்றுசொல்லுவோர் தங்கள்சமயநூல் கூறும் கடவுளிலக்கணத்தையும் தங்கள்தன்மையையும் விளங்காதவராவர் அன்னவர்உரைவெற்றுரையாகின்றது

இத்தகைய வெற்றுரைகளைக் கூறியே மதிவிளக்கமில்லா மதாபிமானிகள் மதமாற்றஞ்செய்து முரண்பட்டுநிற்கின்றனர். இத்தகைய மதமாற்றமும் முரண்பாடும் மக்களைத்தீயபொய்வழியிலே செலுத்தி அன்பு, வாய்மை, ஒற்றுமைஆகியவை வளர்தற்கு இடையூறாய் நிற்கின்றன. தமிழ் மக்களின் வாழ்க்கைப் பண்பாட்டில் இயல்பாயமைந்து நிலையான இன்பம்பயக்கும் உயர்ந்த வாழ்க்கை நெறியை நினைக்கவும் விடாது தடுத்து நிலையில்லா உலகப் பொருள்களில் பித்துண்டாக்கி அறிவைமயக்கி நிற்கின்றன. அதிகாரவெறிகொண்டு அருளொளி கைவரப்பெறாத அக்காலமேல்நாட்டுக் கிறிஸ்தவர்கள் இத்தகைய அறிவீனத்தின்பாற்பட்ட செயல்களைச் செய்தார்களென்று இக்காலத்திலும் எம்அருமைச்சகோதர சகோதரிகள்

இத்தீயதொழிலில் ஈடுபடுதல் முறையாகுமா? அருமைச் சகோதர சகோதரிகளே சைவசமயிகளாயினென், கிறிஸ்தவர்களாயினென், இஸ்லாமியராயினென், பௌத்தர்களாயினென், நாம்யாவரும் ஈழத்தாய் ஈன்றமக்கள் அல்லவா? ஒரேகடவுள்எங்களைப் படைத்தாரல்லவா? எங்கள் மத்தியில் சகோதர அன்பு நிலவமுடியாதுதானா? இதைச்சற்றுச்சிந்தியுங்கள். சிந்தித்துத்தெளிந்து இத்தீயதொழிலை நீக்கி அன்பைவளர்க்கமுயலுங்கள். கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே மிகவும் முக்கியமாக இவற்றை அவதானிக்கவேண்டும்.

அக்காலமேல்நாட்டார் முறைகளைக் கடைப்பிடித்து அதிகாரவெறி கொண்டு இக்காலப்பௌத்த சகோதரர்களும் மதமாற்ற மயக்க முறைகளைமேற்கொண்டு நிற்கின்றனர். நாமில்லை (ஆன்மாஇல்லை) இறைவனில்லை என்னும் இருள்சேருரைகளைக்கூறி இறுமாந்து நின்ற போதிலும் நல்வினை, தீவினை, இவற்றின்பயனாகிய இன்பதுன்பங்கள் சுவர்க்கநரகங்கள் ஆகியஉண்மைகளைச் சைவமக்கள்போல ஒப்புக்கொள்ளும் இவர்கள் எதற்காகவோ இத்தீயமுறையை வளர்க்கமுற்பட்டுநிற்கின்றனர், பௌத்தசகோதரர்களே! பெருந்தீமையை விளைக்கக்கூடிய இத்தீயமுறையை இப்பொழுதே கைவிடுங்கள். அன்பு சத்தியம் ஆதியவைவளர்தற்கு அஃதேவழி.

எம்மை நாங்கள் கடவுளுடைய பிள்ளைகள் என்று ஒப்புக்கொண்டாலென் அல்ல என்றாலென் நாங்கள் வந்தவழிஅறியாது போகும்வழி தெரியாது வாழ்கின்றோமல்லவா? அல்லவென்று சொல்லுவாரும் உளர்கொல்? இறைவன் திருவருளே உறுதுணையெனக் கொள்ளுவோம், அல்லது நாம் இயற்றும் புண்ணியபாவங்களே தஞ்சமென்போம். எவ்வாறுகூறினும் நாம்இன்புற்றுவாழுதற்கு அன்பே அடிப்படை என்றுகண்டுகொண்டோம். அன்புவளர்க்க விழைவோர் துன்பஞ்செய்யாது இன்பமே செய்வர். ஆதலினாலேயே துன்பத்துக் கேதுவாகும் கொலை, பொய், களவு, கள், காமம், ஆகியவை தவிர்க்கப்படவேண்டுமென்று எல்லாமத நூல்களும் ஒரேமொழியாகக் கூறுகின்றன. இவற்றைத்தவிர்த்தல் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நிலையான இடம் பெறல்வேண்டும். இவற்றை நீக்காதுவிட்டால் துன்பமே தொடரும்.

அன்புபொருந்திய சத்தியவாழ்க்கையே அரனருளைப்பெறுதற்கும் இன்பவாழ்க்கை எய்துதற்கும் ஏதுவாகும். இஃதேசிறந்தவழியென்று எல்லாமதநூல்களும் இயம்புவதை முன்னர்க்கண்டோர்களல்லவா? இது சுருதி. இது முழுதுமுண்மை என்பதை, யுக்தி, அனுபவங்களிலும் நாம் கண்டோம். எங்கள் வாழ்க்கையில் இன்பம்பெறுதற்கு வேறுவழி இல்லை, இல்லை. அன்புடையீர் வம்மின்! அன்புநெறிநின்று சத்திய சீலராய் இன்பம் பெறுவோம். அவனருளாலே அவன்தாள்வணங்கி இறவா இன்பம் எமக்குரியதாக்குவோம். வம்மின்! எல்லீரும் வம்மின்.

சுபம் முழுதுமுண்மை.

# பிழைதிருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 12 | ஏல்லாவற்றையும் | எல்லாவற்றையும் |
| 4 | 18 | இராப்பகல் | இராப்பகல் |
| 6 | 1 | ஒள்றிருக்க | ஒன்றிருக்க |
| 6 | 5 | தண்டனே | தண்டனை |
| 6 | 9 | சூதையுஞ் | சூதையுங் |
| 9 | 16 | பேதுகு. | பேதுரு |
| 13 | 24 | பரலோகராச்கியத்தில் | பரலோகராச்சியத்தில். |
| 15 | 11 | வீளக்கிப் | விளக்கிப் |
| 16 | 26–27 | துக்கம்,துக்கோற்பத்தி துக்கநிவாரணைமார்க்கம் | துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் |
| 16 | 30-31 | கடைப்பிடித்ததல் | கடைப்பிடித்தல் |
| 17 | — | புத்தபகவான்சரித்திரம் | புத்தசமயம் |
| 18 | அடிக்குறிப்பு | 80 பக்கம் | 80 ம் பக்கம் |
| 36 | 15 | பலர் | சிலர் |
| ,, | 16 | படைத்தவராகின்றனர் | படைத்தவராக்கப்படுகின்றனர். |
| ,, | 17 | தங்கள்கடமையென்று சொல்லுகின்றனர் | தங்கள் கடமையென்று சிலசட்ட அறிஞரும் சொல்லுகின்றனர் |
| 40 | 20 | தன்மைபது | தன்மையது |
| 43 | 10 | சகோதுரர்களும் | சகோதரர்களுட் சிலரும் |
| ,, | 12 | இருள் சேருரைகளே | ஒளிதரா உரைகளை |